T-UN-486

மணி மலர்

1679



க. நல்லமுத்து நாட்டார்

மணிவிழாக் குழுவினர்

21—9—57.

T-UN-486

திரு. க. நல்லமுத்து நாட்டார்

திரு. க. நல்லமுத்து நாட்டார் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

க. ந. நாட்டாரின் ஊர் :

திருஞானசம்பந்தரால் தென்பிரம்பைக்குடி என்று சிறப்பித்துப் பாடப்பட்ட ஊர், இஞ்ஞான்று கள்ளப் பிரம்பூர் என்றும், பெரிய பிரம்பூர் என்றும் கூறப்பட்டு வருகின்றது. இவ்வூர் ஏறத்தாழ ஆறு மைல் சுற்றள வுள்ள நஞ்சை புஞ்சை நிலங்களோடு கூடியது. 2869 மக்கள் தொகை கொண்டது. 23490 ரூபா சர்க்காருக்கு வரி தருவது. வெண்ணாறு, ஆனந்தக்காவிரி, புதுஆறு ஆய ஆறுகளின் பாய்ச்சல் பெற்றது. தக்க பாய்மடை வடிமடையுடன் நிலங்கள் அமையப் பெற்றிருப்பதால் நீர் இன்றிக் காய்வதோ, நீர் நின்று கெடுவதோ இங்கு ஏற் படுவதில்லை. வெண்ணாற்றின் அண்மையில் வாழ்வுக் கேற்ற வசதிகளுடன் அமையப்பெற்றது.

ஊரின் கிழக்கில் கைலாயநாதர் கோயில், வரதராசப் பெருமாள் கோயில்களும்—மேற்கில் சித்திவிநாயகர் கோயிலும் பெற்று — அரை மைல் தொலைவுக்குக் கிழக்குமேற்காக நீண்ட இரண்டு பெரிய தெருக் களுடன் விளங்குவது இந்த ஊர். ஊரின் நடுவில் காளி யம்மன் கோயிலும் வடக்குப் பக்கத்தில் மாரியம்மன் கோயிலும் உள. இன்னும் சற்று வடக்கில் பச்சையம் மன் (ஏழு முனிகளுடன் தோற்றங் கொண்டவர்) தெற் கில் செங்கழுநீர் அம்மன், மேற்கில் ஐயனூர் (மிகப் பெரிய

யானை, குதிரை வாகனங்களுடன் தோற்றம் கொண்டவர்) கிழக்கில் முனியாண்டவர் ஆகிய தெய்வங்களின் எல்லைப் பாதுகாப்புக்கொண்ட ஊர்.

நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு

என்று தமிழ்நாட்டிற்குத் தெற்கிலும் வடக்கிலும் இரண்டு தெய்வங்களை எல்லைக் காவலர்களாக வைத்துப் பாரதியார் கூறியதும் தண்டமிழ் நாட்டின் பண்டைய மரபாகும். மேலும் அப்பாடலுள் தமிழ்நாட்டில் புகழ் மண்டிக் கிடத்தற்குக் காரணமாகவோ, மண்டிக் கிடக்கும் புகழுக்குப் பாதுகாப்பாகவோ அத்தெய்வங்கள் உள என்ற குறிப்பையும் அவர் காட்டியுள்ளார். அக்கருத்தைப் பிரம்பூரும் எல்லைத் தெய்வங்களும் நினைவூட்டுகின்றன. தமிழ்நாட்டில் இதுபோன்ற அமைப்பினைப் பெற்றுள்ள ஊர்கள் பல உள.

இங்குள்ள கைலாயநாதருக்கு ஐந்து வேலி நிலங்கள் உண்டு. ஆறுகாலப் பூசைகள் உண்டு. சர்க்காரால் தரப்படும் 150 ரூபா மோகினிப்பணம் உண்டு. சித்தி விநாயகருக்கு ஒரு ஏக்கர் நிலம் உண்டு. அன்பர்களின் பூசைகள் உண்டு. பிற தெய்வங்களுக்கும் நாட்பூசை, திங்கள் பூசை, ஆண்டுவிழா முதலிய சிறப்புக்கள் அன்பர்களால் நடத்தப்பெற்று வருகின்றன. காலஞ்சென்ற வைத்திலிங்க நாட்டார் அவர்களால் ஊரின் கிழக்கில் கட்டப்பட்ட திருஞானசம்பந்தர் திருக்கோயிலுக்கு அவர்களாலேயே மூலதனமும் அதற்கு அமைக்கப்பட்டுள்ளது. மாதா கோயில் ஒன்றும் உளது. மருத்துவ நிலையம், அஞ்சல் அகம், மூன்று தொடக்கப் பள்ளிகள், தருமபுர ஆதீன மடம் ஒன்று இவைகள் இவ்வூரில் உள்ளன.

அந்தணர் தெரு, கள்ளர் தெரு, பள்ளர் தெரு, பறையர் தெரு, தொழும்பர் தெரு ஆகிய இடங்கள் — தனித் தனியே அமைக்கப்பட்டும் — ஆங்காங்கே தனித்தனியாகக் குளங்கள், குட்டைகள் அமைக்கப்பெற்றும் — உள்ளன. ஒவ்வொரு தெருவுக்கும் போதுமான அளவுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள அக்கால அளவுக்கு ஏற்ப நத்தங்கள் ஒதுக்கியும் ஊர் நன்ருக அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வூரில் ஒரே சமயத்தில் (1920) 'தாலுக்கா போர்டு' உறுப்பினர் நால்வர் (திரு. க. ந. நாட்டார் ஒருவர்) பின் ''சில்லாப் போர்டு'' உறுப்பினர் இருவர் (திரு. க. ந. நாட்டார் ஒருவர்) 'சில்லாக் கல்விக்குழு' உறுப்பினர் இருவர் (திரு. க. ந. நாட்டார் ஒருவர்) தேவத்தான ஆட்சி உறுப்பினர் இருவர் (திரு. க. ந. நாட்டார் ஒருவர்) இருந்துவந்தனர். இன்னும் நல்ல தமிழறிஞர்கள், மந்திரக்காரர்கள், பலசாலிகள், சிலம்ப விளையாட்டினர் இருந்த ஊர்.

திரு. க. ந. நாட்டாரின் பெற்ருேர் :

இவர்களின் தந்தையார் கந்தசாமி நாட்டார். தாயார் ஆயிராசம்மாள். கந்தசாமி நாட்டாரைப் பணக்காரக் கந்து நாட்டார் என்று கூறுவது வழக்கம். அவ்வாறு கூறப்படுவதற்குக் காரணமாகச் சிலர் அங்கு பல கந்து நாட்டார்கள் இருந்தமையால் இயைபு நீக்கிய விசேடணமாக அவ்வாறு பணக்காரக் கந்து நாட்டார் என்று அழைக்கப்பட்டனர் என்று சொல்வர். அது உண்மை அல்ல. உண்மை பின் வருமாறு—எப்போதும் அவர் சில ஆயிரம் ரூபாய்கள் கையில் வைத்திருப்பார். தனக்கு மிகவும் நெருக்கமானவர்கள் இன்றியமையாத சமையத்தில் தன்னிடம் வந்து கைமாற்ருகவோ நோட்டின் பேரிலோ பணம் கேட்பது வழக்கம். அப்போது அவர் தயக்கமின்றிப் பணம் கொடுத்து உதவுவர். பின்னர்

பணம் வாங்கியவர்கள் ஏதேனும் காலத்திற்கேற்ப ஒரு குறைந்த வட்டி போட்டு வட்டித் தொகையையும் மூலத் தொகையையும் சேர்த்துக் கொடுப்பர். உடனே கந்து நாட்டார் அவர்கள் மூலத்தொகையை மட்டும் எடுத்துக் கொண்டு வட்டித் தொகையை மகிழ்ச்சியுடன் திருப்பிக் கொடுத்துவிடுவர். இது பணம் வாங்கியவர்களின் நாணயத்தைக்காட்டிலும் பணம் கொடுத்தவரின் பேருள்ளத்தைக் காட்டுவதாக நிகழ்ந்து வந்தது. இதனுல் அவ்வாறு அழைத்தனரென்பதே பொருந்தும். இவர் பணத்தை வாழ்வுக்குரிய சாதனமாக எண்ணி நன்கு செலவிட்டுத் துய்த்து வாழ்ந்துவந்தார். சுருங்கக் கூறின் செல்வத்தின் பயன் என்ன என்பதனைத் தன் வாழ்வில் சுட்டிக் காட்டி வாழ்ந்தார். தனது 45 ஆம் வயதில் விண்ணுலகடைந்தார். அவர் மனையாளும் அவருக்கேற்ற முறையில் இல்லறம் ஓம்பலில் நின்று தனது 38 ஆம் வயதில் விண்ணுலகடைந்தார். க. ந. நாட்டாரின் பெற்ருேர்கள் இருவரும் இவரது இளம் வயதிலேயே இவரை விட்டுப் பிரிந்தனர்.

உடன்பிறந்தோரும் உறவினரும் :

க. ந. நாட்டாருக்கு ஒரு தமக்கையும், ஒரு தங்கையும், ஒரு தம்பியும் தோன்றினர். தமக்கை சிவகாமி அம்மாள், இளங்காடு திரு. பால கோதண்டபாணிச் சேதிராயர் அவர்களுக்கு வாழ்க்கைப்பட்டு முதல் கருவுயிர்க்கும்போது சேயுடன் தானும் விண்ணுலகடைந்தனர். தங்கை இரஞ்சிதத்தம்மாள், உள்ளூரில் உள்ள தனது அத்தை மகன் திரு. தெண்டாயுதபாணி நாட்டாருக்கு வாழ்க்கைப்பட்டு ஒரு பெண் மகவை விட்டு விண்ணுலகடைந்தனர். தம்பி ஆறுமுக நாட்டார், நொச்சியம் வீரையா வாண்டையார் மகள் திருமதி ஆண்டாள் அம்மாளை மணந்து இரண்டு ஆண் மகவுடன் வாழ்கின்றனர். க. ந. நாட்டார் அவர்கள், இளங்காடு முத்துக்குமரச்

சேதிராயர் அவர்கள் மகள் திருமதி தையல்நாயகி அம்மாளை மணந்து இல்லற வாழ்வு நடத்திவருகிறார்கள். இந்த அம்மாள் தனக்குக் குழந்தை இல்லை என்ற ஒரு குறையை ஒருபோதும் கொண்டதில்லை. தன் கணவனாருக்குப் பணிவிடை செய்வதிலும், கணவனார் இரவு பகலாக எப்போதும் தன்னுடன் அழைத்துவரும் நண்பர்கள், உறவினர்களுக்கு விருந்தளித்து உபசரிப்பதிலும் பெருமகிழ்ச்சி கொள்பவர். தனது கணவனாரின் அரசியல் வாழ்வுக்குத் தூண்டுகோலாய் நின்றவர். 4–7–57-ல் நடந்த 60 ஆம் ஆண்டுவிழாவன்றுகூட வைதிகச் சடங்குகளில் கணவனாருடன் இருந்த நேரம் போக எஞ்சிய பொழுதில் விருந்தினர்களைக் கவனித்தலிலும் விருந்துணவை நல்ல முறையில் பரிமாறலிலும் பெருங்கவனம் கொண்டிருந்தனர்.

இளமை :

4—7—1897-ல் க. ந. நாட்டார் அவர்கள் தோன்றினர். உள்ளூர் தொடக்கப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரைதான் படித்தார். அப்போது தொடக்கப் பள்ளிகளின் படிப்பு முறை மனப்பாடம் செய்வதையே அடிப்படையாகக் கொண்டிருந்தமையால் க. ந. நாட்டார் அவர்கள் வாய்பாடு, எண்சுவடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை இவற்றை இளமையிலேயே நன்கு மனப்பாடம் செய்திருந்தனர். பின்னர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அப்போது பிரவேசபண்டிதம் தேறிய ஒரு புலவர் இரேவணசித்தையர் என்பவர் உள்ளூர் தொடக்கப் பள்ளிக்கு ஆசிரியராக வந்தார். அவரிடம் க. ந. நாட்டார் அவர்கள் தமிழ்ப்பாடம் கேட்க விரும்பினார். தனது விட்டிலேயே இரவுப் பள்ளிக்கூடம் நடத்த ஏற்பாடு செய்தார். அப்போது நைடதமும் இலக்கணச் சுருக்கமும் கற்பிக்கப்பட்டு வந்தன. அவர் அத்தை மக்களும் ஊரவர் பலரும் அதில் படித்து வந்

தனர். ஆனால் நீண்ட நாள், பள்ளி நடைபெறவில்லை. நடைபெற்ற வரையில் நாட்டார் அவர்கள் ஓரளவு தமிழறிவு பெற வாய்ப்பு ஏற்பட்டது.

க. ந. நாட்டார் இளமையிலேயே பெற்றோர்களை இழந்தமையால் குடும்பப் பொறுப்பினை அவர்களின் அத்தை மகமாயி அம்மாள் ஏற்று நடத்த வேண்டியதாயிற்று. கணவனை இழந்த நிலையில் மகமாயி அம்மாள் தன் மக்கள் — திரு. தெண்டாயுதபாணி நாட்டார், திரு. சுப்பண்ணு நாட்டார் — இருவருடன் தன் அண்ணன் (கந்தசாமி நாட்டார்) மக்கள் இருவரையும் நன்கு வளர்த்து வந்தனர். திலகவதியார் தம்பி திருநாவுக்கரசரை வளர்த்துச் சைவ சமையத்துக்கு ஆளாக்கிவிட்டதை அம்மையார் அடிக்கடி கூறுவார். க. ந. நாட்டார் அவர்கள் சைவப் பண்பில் வலுப்பெற்று நிற்க அம்மையார் ஓரளவு காரணமாயிருந்தனர்.

நாட்டார் அவர்கள் தன் அத்தையின்மூலம் முயற்சி, ஊக்கம், எளிமை, அமைதி, செட்டு, சிக்கனம் இவைகளை அடைந்தனர் என்னலாம். இளமையிலேயே இவர்கள் பெற்ற இக்குணங்கள் நாளடைவில் நன்கு உரம் பெற்று வளரத் தொடங்கின. இவர்களின் செல்வக் குழந்தைகளாக இவர்களுடன் நின்று இன்றும் இவர்களின் குறிப்பின்வழி ஒழுகலாயின. இக்குணங்களில் ஒன்றும் ஒருபோதும் இவர்களின் அத்து மீறியதில்லை. தன் ஆணைக்கும் அத்துக்கும் அடங்கிச் செல்ல அவைகளை நன்கு நெறிப்படுத்தி வைத்திருந்தனர். ஒரு முறை இவர்களைச் சந்தித்தவர், சந்தித்துப் பேசியவர் உடனே இவரைத் தம்மவராகக் கொள்ளும்படியாக நடந்து கொள்ளும் இவரது சக்தி மேற்கண்ட குணங்களை அடிப்படையாகக் கொண்டதுதான். இவர் இளமையிலிருந்து தன் கருத்தைப் பிறரிடம் கூறுவதினும் பிறர் கருத்தைக் கிண்டிக் கிளறிக் கேட்பதிலேயே முனைந்திருந்தனர். இது

இவரது வாழ்வில் வெற்றிதரக் காரணமாயிருந்தது. கற்ற கல்வியைக்காட்டிலும் கருத்துக்கள் மிகப் பெற்றமைக்கும் இதுவே காரணமாக இருந்தது.

நாட்டாரின் அரசியல் வாழ்வு :

1914—1918-ல் நடந்த போரின் இறுதியில் தாலுக்கா போர்டு வந்தது. அப்போது முதலில் திருக்காட்டுப்பள்ளித் தொகுதியில் நின்று போர்டு உறுப்பினராய்த் தேர்ந்தெடுக்கப் பெற்றார். பின்னர் 1934-ல் அது கலைக்கப்படும்வரை தொடர்ந்து இருந்து வந்தார். தாலுக்கா போர்டு மூலம் தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களின் தொடர்பு நாட்டாருக்குக் கிடைத்தது. அவர்கள் மூலம் ஏ. டீ. பன்னீர்ச்செல்வம் அவர்களின் தொடர்பும் கிடைத்தது. க. ந. நாட்டார் அவர்கள் அவ்விருவரையும் தம் அரசியல் ஆசிரியர்களாகவும் நெருங்கிய நண்பர்களாகவும் கொண்டு பழகி வந்தனர். அப்போது தஞ்சை மாவட்டத்தில் இருந்த சில கட்சிகளின் போக்கு நாட்டாரை அவர்களிடமிருந்து தனித்துப் பிரிக்க முயன்றது. சாதி வெறியைக் கிளப்பியது. நாட்டார் அகம்படியக்கள்ளர் தனிக்கள்ளர் அல்லர் என்றுகூடக் கூறத் தலைப்பட்டது. ஆனால் நாட்டார் அப்போலிக் கூற்றுக்களுக்கு அஞ்சிலர். கவலைப் பட்டிலர். மக்களுக்கும், நாட்டுக்கும், மொழிக்கும் நன்மை செய்யும் நோக்கமே அடிப்படையாகக் கொண்ட பெரியோர்களைப் பின்பற்றுவதால் நமது பொதுப்பணி சிறப்படையும் என்ற உண்மையைக் கண்டார். தன்னலமின்றி உடல் நலமும் பாராது உழைத்தார். தாலுக்கா போர்டின் துணைத்தலைவராகவும் இருந்து தொண்டு செய்தார். அப்போது தாலுக்கா போர்டிலிருந்து சில்லாப் போர்டுக்கு மறைமுகத் தேர்தல் நடந்துவந்தது. அதில் நின்று வெற்றி பெற்றார். பின்னர் சில்லாப் போர்டுக்கு நேர்முகத் தேர்தல் நடைபெற்றது. அதில் நின்றும்

வெற்றி பெற்றார். சில்லாப் போர்டிலிருந்து கல்விச் சபைக்குச் சிலரைத் தேர்தல் மூலம் அனுப்புதல் விதியாக இருந்தது. எனவே தஞ்சைக் கல்விச் சபைக்கும், தஞ்சைச் சில்லாப் போர்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவரானார். இன்னும் சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தின் உறுப்பினராகவும், துணைத்தலைவராகவும் இருந்து பணியாற்றியுள்ளார். நீதிக்கட்சி நல்ல நிலையில் இருந்து பணியாற்றிய போதெல்லாம் இவர் அதிலிருந்து நன்கு பணி செய்து நற்பெயர் பெற்றவர். பின்னர் நல்ல தலைவர்கள் யாவரும் இன்றி நீதிக்கட்சியை நன்கு நடத்துவாரின்றிப்போன காலத்தில் பணி செய்து பழகிய இவர் மனம் வேறு வழியின்றிக் காங்கிரசில் சேர இவரைத் தூண்டியது. அதனால் காங்கிரசில் சேர்ந்து ஊர்க்காங்கிரசு, தாலுக்காக் காங்கிரசு, சில்லாக் காங்கிரசு இவைகளில் உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்து தொண்டு செய்யலானார். இவர் வாழ்வில் குறிப்பிடத்தக்க ஒரு செய்தி, தேர்தலில் இவருக்குத் தோல்வியே இல்லையென்பது. தேர்தலில் வெற்றி பெறுதல் இவருக்கு உடன்பிறந்த ஒரு வாய்ப்பாக இருந்து வந்தது. முதிர்ச்சி இவரைப் பற்றித் தளர்வை உண்டாக்கியும், இரத்தக் கொதிப்பு, குண்டிக்காய்ச் சோர்வு, முதலிய இவர்கள் செயலைத் தடைப்படுத்தியும் வெற்றி மட்டும் இவர்களின் பக்கத்துணையாகவே நின்று வருவதாயிற்று. இவரது பொதுப்பணி வாழ்வு ஏறத்தாழ 25 ஆண்டுகள் இருந்தன. இந்தக் காலங்களில் பொதுப்பணி செய்யும்போது, தான் இருந்த தாலுக்கா போர்டு சில்லாப் போர்டு முதலிய நிறுவனங்களைத் தனக்குப் பயிற்சியளிக்கும் ஒரு பள்ளியாகவே நினைத்துத் தன் கடமையைச் செய்து வந்தாரேயன்றிக் காலத்தைக் கணக்கிட்டு, ''நான் இவ்வளவு நாள் அனுபவித்தது போதும்'' என்று கூறுகின்ற சிலரின் போக்கு இவரிடம் சிறிதும் தோன்றியதில்லை. ''நான் பட்ட தொல்லையும்

பெற்ற பழியும் போதும்'' என்று சொல்லும் சிலரின் சோர்வுப் பேச்சும் இவர்களிடம் தோன்றியதில்லை.

நிறுவனங்கள் மக்கள் நன்மையைக் கருதி அமைக்கப் பட்டுள்ளன. அதற்குப் பிரதிநிதியாகச் சென்று பணி யாற்றுபவர் தனக்குரிய பங்கினைத் தனது வட்டத்தில்—முடிந்தால் பிற வட்டத்திலும் சென்று — நிறைவேற்ற வேண்டும் என்ற உண்மையை நன்கு உணர்ந்தவர். அந்த உரிமையை நிறைவேற்றலே கடமை என்ற கொள்கை யைக் கடைப்பிடித்துக் கருத்தாக முடிப்பார். எத் துணையோ மாணவர்களைத் திருவையாறு, உரத்தநாடு, அரசர்மடம் — இங்குள்ள விடுதிகளில் சேர்த்து விட்டுள் ளார். மாணவர்கள் எவரேனும் இவர்களை அறிந்தோ அறியாமலோ அணுகி ''ஐயா, நான் கற்கும் விருப்பம் உள்ளேன் ஏதேனும் விடுதியில் சேர்த்து உதவி செய்ய வேண்டும்'' என்று வேண்டினால் உடனே இவர்கள் அம் மாணவரின் சாதியோ, மதமோ, ஊரோ, மாவட்டமோ, ஒன்றும் கேட்காமலே அவருக்கு ஆதரவு காட்டுவார். தனது செலவிலேயே அம்மாணவனை அழைத்துக் கொண்டு சென்று தலைவரவர்களின் காலம் பார்த்து, நோக்கம் பார்த்துக் காத்திருந்து காரியத்தை முடித்து வைப்பார். தனது வசதியையோ, தனது தனிப்பட்ட பெருமையையோ நோக்காமல் காரியத்தை முடிப்பதே தனது கடமையாகக் கொண்டு தளர்வின்றிச் செய்வர். நிறுவனத்தில் தனக்குள்ள பொறுப்பும், மாணவனின் நலனையுமே பெரிதாகக் கருதுவார். நிறுவனத் தலைவர் களின் தொடர்பினைப் பொதுப்பணிக்கே பெரிதும் பயன் படுத்துவார். அந்த உறைப்பால் அலுவலகங்களில் சென்று அலுவலர்களையும் வசப்படுத்திக்கொண்டு எவ் வளவோ ஊழியர்களுக்கு — வேலை சரிவர நடக்கும் முறை யில் — மாற்றம் வாங்கித் தந்துள்ளார். பலருக்கு உத்தி யோகங்கள் வாங்கித் தந்திருக்கிறார். தனது அரசியல் வாழ்வில் முழுநேரமும் பொதுப்பணியே செய்துவந்தார்,

விவசாய வேலை முழுதும் புறக்கணிக்கப்பட்டது. குடித்தன வேலையைக்கூடத் தன் மனைவியாரிடமே ஒப்படைத்து மக்கள் தொண்டே தனது விவசாயமாகவும், குடித்தன வாழ்வாகவும் கொண்டிருந்தார்.

தமிழ்ப்பணியும் சமயப்பணியும் :

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாக்களுக்கு ஒல்லும் வகையால் உதவுவார். விழாக்காலங்களில் தமது ஊரவர், சுற்றுவட்டத்தினர் இவர்களை அழைத்து வந்து தமிழ்ப் பயனைத் துய்க்கச் செய்வார். சங்கத்துக்குப் பல உறுப்பினர்களைச் சேர்த்தும் தான் ஆயுள் உறுப்பினராக இருந்தும், நன்கொடை வழங்கியும் சங்கத்துக்கு ஆக்கம் தேடித் தருபவர். தமிழவேள். த. வே. உ. அவர்களாலும், பாரிட்டர். ஏ.டி.பி. அவர்களாலும் தமிழுக்குச் செய்யப்படும் ஆக்க வேலைகள் எவற்றுக்கும் உறுதுணையாய் நின்று ஆவன செய்வார். ந. மு. வே. நாட்டார் பேரவைக்கும் ஆயுள் உறுப்பினராக இருந்தும் நன்கொடை உதவியும் தமிழ்த்தொண்டு செய்து வருபவர். இன்னும் தமிழ் வளர்ச்சிக் கழகங்கள் பலவற்றுக்கும் உதவி செய்துள்ளார். கள்ளப்பிரம்பூரில் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகத் திருஞானசம்பந்தர் நாளினை ஒரு தமிழ் விழாவாகக் கொண்டாடி வந்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டிலும் விழாவன்று தமிழ்நாட்டிலிருந்து பற்பல தமிழறிஞர்கள் வந்து கலந்துகொள்ளவும், நல்ல பொருள்கள்பற்றிச் சொற்பொழிவாற்றவும் ஏற்பாடு செய்வார்கள். அன்று தேவார இன்னிசை முழங்கும். நாவலர்கள், பேராசிரியர்கள், அறிஞர்கள் தம்முள் கலந்து பேசவும் தத்தமக்கு விருப்பமான தலைப்பினைச் சிறிது சிறிது பேசவும் வாய்ப்பு அளிக்கப்படும். நூற்றுக்கணக்கான தமிழர்கள் கூடி இன்புற்று மகிழ்வர். செவியமுதுடன் சுவையமுதும் நாட்டார் அவர்கள் வழங்குவர். இது அவர்களின் தமிழ்ப்பணியாகவும் சைவ சமயப்பணியாகவும் நடைபெற்று வருவதாகும்.

அன்றியும் சமையப்பணியாக உள்ளூர் சிவன் கோயிலுக்கு உச்சிக்காலப் பூசையும், சித்தி விநாயகருக்கு ஒரு காலப் பூசையும் நடத்திக்கொண்டு வருகிறார்கள். சிவன் கோயிலின் கார்த்திகைத்திங்கள் திங்கள்நாள் சிறப்புக்கள் ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறும். அவற்றுள் இரண்டாம் திங்கள்நாள் சிறப்பு இவர்களால் நடத்தப்பெற்று வருகிறது. புரட்டாசித் திங்களின் ஒன்பதிரவு விழாவில், இவர்கள் விழா சிவன் கோயிலில் ஒரு நாளும் பெருமாள் கோயிலில் ஒரு நாளும் சிறப்பாக நடக்கும். பங்குனி உத்தர விழா சிவன் கோயிலில் இவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அற்பசி மாதம் கந்தனின் சஷ்டி நாளைச் சிறப்பாக இவர்கள் கொண்டாடி வருகிறார்கள். ஆடி வெள்ளி ஒரு நாளிலும் தை வெள்ளி ஒரு நாளிலும் பெருந்திருவாட்டியம்மனுக்கு அலங்காரம் முதலிய செய்து கொண்டாடி வருகிறார்கள். காளியம்மனுக்கு ஆண்டுதோறும் மாசி மாதம் மூன்று நாள் நடைபெறும் கரக விழாவின்போது அம்மனுக்கு அலங்கார, அபிஷேகச் சிறப்புக்கள் இவர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. அர்ச்சனைக் கட்டளைகள் பழநி முருகனுக்கும், தில்லை நடராசருக்கும், மதுரை மீனாட்சியம்மனுக்கும், திருச்செந்தூர் செந்தில் ஆண்டவருக்கும் இவர்களால் நடைபெற்று வருகின்றன. கள்ளப்பிரம்பூரின் கீழ்பால் தட்டான்சாவடி என்ற இடத்தில் ஒவ்வொரு ஆண்டும் கோடை காலத்தில் தண்ணீர்ப் பந்தல் தருமம் இவர்களால் நடைபெற்று வருகின்றது.

நாட்டாரின் நகைச்சுவை :

ஒரு சமையம் அரசியல் தலைவர் ஒருவர் நாட்டாரிடம் வந்து ''என்ன சார் நான் வருகிற **M. L. A.** தேர்தலுக்கு நிற்கின்றேன், அதுகுறித்துத் தங்களுக்குக் கடிதம் (கடிதம் எழுதாமலேயே) எழுதியிருந்தேனே வந்ததா'' என்றார். உடனே இவர் அவர் பொய்மையைப் புரிந்து

கொண்டு "ஆம் வந்தது, தக்க விடைகூட எழுதியிருந் தேனே வந்திருக்குமே" என்ருர்.

மற்ருெரு சமையம் நாட்டார் ஒரு 'டாக்டர்' இடம் வைத்தியம் பார்த்துக்கொண்டிருந்தபோது ஒரு பார்ப் பன வக்கீல் அங்கு வந்தார். அந்த நண்பர் இவரைப் பார்த்தவுடனே "அடே நல்லமுத்து உனக்கு எப்படி யப்பா இந்த வியாதி வந்தது? டாக்டர், இவனைக் கவ னித்துக்கொள்ளுங்கள்; ரொம்ப நல்லவன். பாவம்! இவனுக்கு இந்த வியாதி வரக்கூடாது" என்று சொல்லி விட்டுச் சென்ருர். நாட்டாரிடம் அந்த டாக்டர் மிகவும் மதிப்பு வைத்திருந்தார். வக்கீல் பேசியது 'டாக்டரு'க்குப் பிடிக்கவில்லை. உடனே நாட்டார் அந்த இடத்தில் சமையோசிதப் புத்தியுடன் பின் கண்டவாறு சமாளித் துக்கொண்டார். டாக்டர், அவன் எனது வகுப்புத் தோழன். நாங்கள் இருவரும் சிறு பிள்ளைகள் மாதிரியே இன்றும் பேசிப் பழகிவிட்டோம். அவன் மிகவும் நல்ல வன். கெட்டிக்காரன்கூட என்று கூறி முடித்தார்.

மற்ருெரு சமையம் ஒரு உறவினர் இவரிடம் வந்து "என்ன தம்பி நீ எப்போதும் மருந்தும் கையுமாக இருக் கிருயே, எனக்கு வயது 62 ஆகிறது இதுவரை எந்த டாக்டரும் என்னைத் தொட்டதே இல்லை" என்ருர். உடனே இவர் அப்படியா? தங்களை எந்த டாக்டரும் தொடவில்லை என்ருல் டாக்டர் அம்மாள் தொட்டு......... என்ருர்.

பின் ஒரு சமையம் ஒருவர் இவரிடம் வந்து என்ன ஐயா, எல்லோரும் கார் வைத்திருக்கிருர்கள் நீங்கள் கார் இல்லாமல் இருக்கிறீர்களே என்ருர். உடனே இவர் இல்லையா யார் கூறியது? காருக்கு விதை போட்டுவிட் டேனே என்ருர். இப்படிப் பல.

நாட்டாரின் அன்பும் பணியும் :

எவரிடத்தும் அன்பாகவும் பணிவாகவும் பேசுவார்கள். ஆண்டில் முதிர்ந்தவராயினும் இளையவராயினும் அறிவு, அனுபவம் மிக்கவராயினும் அவை குறைந்தவராயினும் அவைபற்றி வேற்றுமை கருதாது அன்பு அடிப்படையில் பழகுவார்கள் ; பேசுவார்கள். படபடப்பாக எதையும் யாரிடமும் பேசிவிடமாட்டார்கள். அன்புடன் அமைதியும் நிதானமும் இவர்களது பிறப்புரிமையாகக் காணலாம். பணிவுடைமையையும் எளிமையையும் இவர்களுடன் பழகியவர்கள் என்றும் மறவார்.

4—7—57-ல் நடந்த 60-ம் ஆண்டு விழாவில் தன்னைப் பாராட்டி யுரைத்தவர்களுக்குப் பதில் கூறுமுகத்தான் அன்பும் பணிவும் அடக்கமும் தோன்ற இவர்கள் கூறிய சில சொற்கள் அன்று கூட்டத்தில் இருந்தவர்களுக்கு என்றும் ஒலித்துக்கொண்டிருக்கும். இவர்கள் நூற்றுண்டு விழாவளவு வாழ இறைவன் அருள் புரிவானாக.

புலவர், ஏகாம்பரநாதன்.

Prof. A. Chidambaranatha Chettiar,
M. A., Ph. D.,
Head of The Department of Tamil (Arts)
and Member of The Syndicate

Annamalai University
Annamalainagar.
(SOUTH INDIA)

1—6—1957,

தமிழ் மொழியின் வளர்ச்சியிலும் தமிழ் மக்களின் முன்னேற்றத்திலும் சிறந்த கருத்துக் கொண்ட திரு. க. நல்லமுத்து நாட்டார் அவர்கள் 60 ஆண்டு நிறைவெய்தியமை யறிந்து மகிழ்கின்றேன். தாளாற்றி ஈட்டிய பொருளைத் தக்க வழியில் வேளாண்மை செய்து வரும் உயரிய பண்புடைய திரு. நாட்டார் அவர்கள் உடல்வலிவொடு மேலும் பல்லாண்டு வாழ்ந்து பல தொண்டுகள் ஆற்றும்படி இறைவன் அருள்புரிக என வழுத்துகின்றேன்.

அ. சிதம்பரநாதன்.

சாமி சிதம்பரனர்

நாம் எத்தனையோ மனிதர்களுடன் பழகியிருக்கிறோம். நாம் இதுவரையிலும் எத்தனை மனிதர்களைப் பார்த்திருக்கிறோம்; எத்தனை மனிதர்களுடன் பேசியிருக்கிறோம்; என்று கணக்குச் சொல்ல முடியாது.

ஆனல் ஒன்றுமட்டும் உண்மை. நமது உள்ளத்திலே எத்தனை மனிதர்கள் குடிகொண்டிருக்கிறார்கள்? அவர்களுடைய உருவம் எப்படி இருக்கிறது? அவர்கள் பேச்சு எப்படி? அவர்கள் செய்கை எத்தகையது? அவர்களுடைய தன்மை என்ன? என்பவைகளைப்பற்றி மட்டும் கணக்கிட்டு விடலாம். நினைத்து நினைத்து ஒவ்வொருவரைப்பற்றியும் எழுதியும் விடலாம்.

நாம் பழகிய அந்த மனிதரை நாம் பார்த்துப் பல்லாண்டுகள் இருக்கலாம். அவருக்கும் நமக்கும் கடிதப் போக்குவரத்துக்கூட இல்லாமலிருக்கலாம். அவர் இருக்கும் இடத்துக்கும் நாம் இருக்கும் இடத்துக்கும் நீண்ட தூரம் இருக்கலாம்.

ஆனல் அவரைப்பற்றி இப்பொழுது நாம் நினைத்தால் கூட அவர் நம் கண்முன்னே காட்சியளிக்கிறார். எத்தனை ஆண்டுகளுக்கு முன்னே, எந்த உருவத்தில் அவரைப் பார்த்தோமோ அதே உருவத்துடன் இப்பொழுது பார்க்கின்றோம். எத்தகைய பேச்சை அவரிடமிருந்து கேட்டோமோ அதே பேச்சை இப்பொழுது கேட்கின்றோம்.

இம்மாதிரி நாம் மனக்கண்ணல் காணக்கூடிய மனிதர்களிடத்தில் ஏதேனும் ஒரு சிறப்பு இருந்துதான் தீர வேண்டும். ஆகையால்தான் அவர்கள் நம் உள்ளங் கவர்பவர்களாக இருக்கின்றனர். ஒரு சிறப்பும் அற்ற வெறும் மனித உருவங்கள் நம் உள்ளத்தைக் கவர்வதில்லை.

இச் செய்தியை ஒவ்வொருவரும் தத்தம் பழக்கத்தில் அறியலாம்.

இந்த உண்மையை அளவுகோலாகக்கொண்டு பார்க்கும்போது—இந்த அளவு கோலைக்கொண்டு நண்பர் நல்லமுத்து நாட்டார் அவர்களை அளந்து பார்க்கும்போது அவர் இதுவரையிலும் எத்தனை பேர்களுடன் பழகியிருக்கின்ருரோ அத்தனைபேர்கள் உள்ளத்திலும் அவர்குடி கொண்டிருக்கிருர் என்பதிலேஐயம் இல்லை,

திருவாளர், நல்லமுத்து நாட்டார் அவர்களை நான் பார்த்துக் கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளாவது இருக்கலாம். ஆனல் இப்பொழுது அவரை நினைத்தால் கூட அப்படியே என் கண் முன்னே காட்சியளிக்கின்ருர்.

வெண்மையான உடை; குடுமித்தலை. முத்துப்போன்ற பற்கள்; சிரித்துப்பேசும் பேச்சு; ஆத்தலும் நகைப்பும் பொருந்திய சொற்கள்; எதற்கும் கோபித்துக்கொள்ளாமல் பேசும் பெருந்தன்மை; இவைகள் எல்லாம் என் கண்முன்னே அப்படியே நிற்கின்றன.

பல இரவுகள் கரந்தைத் தமிழ்ச் சங்கம் பள்ளிக்கூடத்திலே, அவரும் இன்னும் சில நண்பர்களும் ஒன்ருகப்படுத்துக்கொண்டு தூக்கம் வரும் வரையிலும் ‘அரட்டை’ யடித்துக்கொண்டிருந்த நிகழ்ச்சியை இன்னும் என்னல் மறக்கமுடியவில்லை. ஒரு சிறந்த மனிதரின் உயர்ந்த பண்மை எப்படித்தான்மறக்கமுடியும்?

திரு, நல்லமுத்து நாட்டார் அவர்கள் உண்மையில் நல்லமுத்துத்தான். நல்லமுத்துக்கு எப்பொழுதும் மதிப்பு உண்டு; பாராட்டு உண்டு. யார்தான் நல்ல முத்தை வேண்டாம் என்று வெறுப்பவர்கள்?

திரு. நல்லமுத்து நாட்டார் அவர்களின் உயர்ந்த தன்மையைக் குறிக்க ஒரு எடுத்துக்காட்டுமட்டும்போதும்.

காலம் சென்ற தமிழவேள். உமாமகேசுவரம் பிள்ளை அவர்களைத் தமிழகத்தில் அறியாதார் இல்லை. காலம் சென்ற சர். ஏ. டி. பன்னீர்ச்செல்வம் அவர்களையும் நாடு முழுவதும் அறியும். இவர்கள் இருவரும் சிறப்பாகத் தஞ்சை மாவட்டத்திற்குச் செய்திருக்கும் பணிகள் அளவற்றவை. இவர்களோடு இறுதிவரையிலும் விடாத தொடர்புகொண்டிருந்தவர் திரு. நாட்டார் அவர்கள்.

அரசியல் கொள்கை வேறுபாடு காரணமாகத் திரு. நாட்டார் அவர்களை, இவர்களை விட்டுப் பிரிக்க எத்தனையோபேர் முயன்று பார்த்தனர்; எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்தனர்; எவ்வளவோ ஆசைவார்த்தைகளைக் கூடக் கூறினர். சாதி வெறுப்பைக் கிளப்பி விட்டனர். ஒன்றாலும் திரு. நாட்டார் அவர்களின் உறுதியை அசைக்க முடியவில்லை.

திரு. உமாமகேசுவரம் பிள்ளை, திரு. பன்னீர்ச்செல்வம் ஆகியோர் செய்யுங்காரியங்களில் தவறு இல்லை. அவர்கள் செய்யும் பணிகளால் எந்தச்சமூகத்திற்கும் எவ்விதத் தீங்கும் இல்லை. இப்படிப்பட்ட நல்லவர்களை ஆதரிப்பதிலே தவறு என்ன? அறிவும், ஒழுக்கமும், திறமையும், தன்னலமற்ற தன்மையும் உள்ளவர்களுடன் இணைந்து நிற்பதன் வாயிலாகத்தான் நாமும் பொதுமக்களுக்கு நன்மைபுரிய முடியும் என்ற ஒரே குறிக்கோளுடன் இவர்களுடைய தோழர்களாக விளங்கினவர்களிலே திரு. நல்லமுத்து நாட்டார் அவர்கள் தலை சிறந்தவர்கள். நாட்டார் அவர்களின் உள்ளத்தையும் உறுதியையும் காட்டுவதற்கு இது ஒன்றே போதுமான உதாரணமாகும்.

திரு. நல்லமுத்து நாட்டார் அவர்கள் தொட்டகாரியங்களில் தோல்வி அடைபவர் அல்லர். எடுத்த செயலை இறுதிவரையிலும் முயன்று முடிக்கும் திறமையும் தன்மையும் அவரிடம் உண்டு. எத்தனையோ தேர்தல்களில் அவரைத் தோற்கடிக்க எவ்வளவோ பேர் முயன்ற

துண்டு. ஆனால் அவர் தோல்வியடைவதில்லை. வெற்றியே பெற்றுவந்தார். அவர் செய்த செயல்கள், செய்யும் செயல்கள் நன்மையானவை என்ற நம்பிக்கை பொது மக்களுக்கு இருந்தது. ஆகையால் அவரையே அவர்கள் தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர்.

பொதுப்பணியிலே தலையிடுகின்றவர்களில், உண்மையாகவே பொது மக்கள் நலனுக்காகப் பாடு படுவோர் சிலர்தான். பெரும்பாலோர் தங்கள் உயர்வுக்குப்பொதுப் பணியை ஒரு ஏணியாகப் பயன்படுத்துவதையே நாம் பார்க்கின்றோம்.

திரு. நல்லமுத்து நாட்டார் அவர்கள் உண்மையான பொதுப் பணி புரியும் ஆர்வம் உள்ள ஒரு சில மனிதர்களிலே ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய சிறந்த ஒருவருக்கு அறுபது ஆண்டு நிறைவேறுகிறது என்றால் அது அனைவருக்கும் மகிழ்ச்சிதரும் செய்தியே தான்.

திரு. நாட்டார் அவர்கள் என்னைவிட வயதிலே மூத்தவர். நான் அவரைவிட நாலைந்து வயது குறைந்தவன், இதனால் 'நாட்டார் அவர்கள் நூறு வயதுவரையிலும் வாழ்க' என்று ஆசிர்வதிக்க என்னால் முடியவில்லை. பெரியவர்கள் சிறியவர்களை ஆசிர்வதிப்பதுதான் நமது நாட்டு வழக்கம். அந்த வழக்கத்தை மீற எனக்கு விருப்பம் இல்லை. ஆதலால் திரு. நாட்டார் அவர்கள் நாட்டார் பலரும் விரும்பும் நல்லமுத்து ஆவர்.

★

மாணவர் மன்றம்,
17, இரத்தினமுதலி தெரு, சென்னை I.

மணிவிழாத் தலைவர் :

உயர்திரு. நல்லமுத்து நாட்டார் அவர்கள்

பேரன்புடையீர்,

வணக்கம்.

தங்களின் அறுபதாம் ஆண்டு மணிவிழா அழைப்பிதழ் கிடைக்கப்பெற்று எல்லையில்லா மகிழ்ச்சி கொண்டோம். வாழ்க வாழ்க என உள்ளம் குளிர வாழ்த்துகின்றோம்.

மணி விழாத் தலைவர் அவர்களே! தாங்கள் புகழ் விரும்பாமல் பொது நலத்தொண்டாற்றும் தூய உள்ளம் படைத்தவர்கள். அன்பு, ஒப்புரவு, பெருந்தன்மை, ஈகை முதலிய உயரிய குணங்கட்கெல்லாம் உறைவிடமாக விளங்கி வருபவர்கள், தங்கள் வாக்கால் வாழ்வுபெற்ற இளைஞர்கள் பலர். தங்கள் உதவியால் மாணவர்கள் பலர் உணவும் உறையுளும்பெற்று ஐயாற்று அரசர் கல்லூரியில் அருந்தமிழ் கற்று இன்று தமிழ்ப் பணியாற்றி வருவதை நாங்கள் உணர்வோம். இங்ஙனம் எண்ணற்ற ஏழை மாணவர்கட்கு வாழ்வின் வழிகாட்டியாய் அமைந்து தாங்கள் ஆற்றிய அருந்தொண்டினை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அத்துணை மாணவர்கள் சார்பிலும் இந் நன்னாளில் நீங்கள் நீடுவாழ்க! வாழ்க! என வாழ்த்துகின்றோம்.

மேலும் தாங்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் நெடு நாட்களாகத் தொடர்புகொண்டு அதன் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்து வரும் செய்தியும் நாடறிந்த ஒன்றாகும். தமிழவேள்; உமாமகேசுவரம் பிள்ளை, கரந்தைக் கவியரசர்; அரங்க." வேங்கடாசலம் பிள்ளை போன்ற

பேரறிஞர்கள் தங்களிடம் வைத்திருந்த பெருமதிப்பினை யும் பேரன்பினையும் நாங்கள் அறிவோம். அத்தகைய அறிஞர்போற்றும் மணியாக விளங்கும் தங்கட்கு இன்று அறுபது ஆண்டுகள் நிரம்பி மணிவிழா நடப்பது அறிந்து எங்கள் மாணவர் மன்றத்தினர் அனைவரும் பெருமகிழ்ச்சி கொள்கின்றோம்.

தாங்கள் மேலும் பல ஆண்டுகள் உடல் நலத்துடன் நல்வாழ்வு வாழ்ந்து முத்து விழா, நூற்றாண்டு விழா முதலிய சிறப்புக்களை எல்லாம் காணவேண்டும் என்று மன்றச் சார்பில் எங்கள் நல் வாழ்த்துக்களைத் தெரிவித் துக் கொள்கின்றோம். தாங்கள் தங்கள் வாழ்க்கைத் துணைவியாருடன் எல்லாவகை வளங்களும் எய்தி அமை தியான நல்வாழ்வு வாழ ஆண்டவன் அருள்புரிவானாக.

வாழ்க! வாழ்க! வளம்பல நிறைந்தே.

இங்ஙனம்,

புலவர். தங்கள் நலம் விரும்பும்,

மயிலை சிவ முத்து. **கோ. வில்வபதி,**

தணிகை. உலகநாதன்,

அமைச்சர்கள்.

வாழ்த்துப்பா.

வித்துவான், S. தாமஸ் உடையார்.

பூவெல்லாம் தாமரையின் பூவாமோ பூவிலுள்ள
காவெல்லாம் கற்பகப்பூங் காவாமோ—மாகடலுள்
உள்ளமுத் தெல்லாம் உயர்பிரம்பூ ரண்ணலாம்
நல்லமுத் தாமோ நவில்.

நாட்டார் குலவிளக்காம் நல்லமுத்து வின்புகழைக்
கேட்டார் சிரமசைப்பர் கேளாரும்—பாட்டில்
பரம்பூரா னேவென்று பைந்தமிழ்நூல் பார்ப்பர்
பிரம்பூரா னென்றபெய ரால்.

உ

க. நல்லமுத்து நாட்டார்.

திருவாளர் க. நல்லமுத்து நாட்டார், தஞ்சை மாவட்டத்தில் கள்ளப்பிரம்பூர் என்னும் ஊரில் 1897-ஆம் ஆண்டில் ஓர் செல்வக் குடும்பத்திற் பிறந்தவர். இவர் மிக இளமையிலேயே பொதுத்தொண்டில் ஈடுபடத் தொடங்கினர். கள்ளர் சமூகத்தவரில் மிக மிகச்சிலரே இவரைப்போன்று பொதுத்தொண்டில் அக்காலத்தில் ஈடுபட்டனர். தாலுக்கா போர்டுகளுக்கு அங்கத்தினர் தேர்ந்தெடுக்கும் சட்டம் வந்த தொடக்க காலத்திலேயே இவர் போட்டியிட்டு வெற்றிபெற்றுத் தாலுக்கா போர்டு உறுப்பினர் ஆனர். பின்னர் ஜில்லாப் போர்டிற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் இவைகளிலிருந்து பலவாண்டுகள் பொதுப்பணி செய்து வந்தார். அப்பொழுது காலஞ்சென்ற பெரியார்களாகிய தமிழவேள். த. வே. உமாமகேசுவரம்பிள்ளை அவர்களுடைய தொடர்பும், சர். A. T. பன்னீர்செல்வம் அவர்களுடைய தொடர்பும் இவருக்கு ஏற்பட்டது. த.வே. உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள் இவர்கள்பால் நெருங்கிய நட்புரிமைகொண்டு பழகிவந்தனர். இவர்களால் பயன் அடைந்த மாணவர்களும், தமிழாசிரியர்களும் பலர் ஆவர். தெய்வ பக்தியும் சாந்தியும் கூடிய சிறந்த ஒழுக்கமுடையவர். பல ஆண்டுகள் திருவையாற்று ஏழூர் விழாவின்போது நடந்து ஏழூரும் வலம் வந்தவர். ஆண்டுதோறும் தமதூரில் உள்ள திருஞானசம்பந்தர் கோயிலில் குருபூஜை நடத்திப் புலவர்களையும், அடியார்களையும் ஆதரித்து வருகின்றூர். இவர் பலவாண்டுகள் உடல் நலத்துடன் வாழ்ந்து சமூகத்தினருக்கும் பிறருக்கும் உதவியுடன் கூடிய தொண்டு செய்து வருமாறு இறைவன் அருள்பாலிப்பானுக.

ந. மு. கோவிந்தராய நாட்டார் B. A., L. T.

நாட்டார் வாழ்க !

அன்புளத்தா லின்சொல்லால் ஆன்றசான் ருண்மையால்
இன்புளத்தோ டேசெய் யுதவியிஞல்—மென் புலத்தார்
நல்லமுத்து நாட்டாரை நல்லவரென் றேத்திப்பின்
சொல்லிடுவர் வாழ்கவெனுஞ் சொல்.

புலவர். பாலசுந்தரம், கரந்தை.

பாரதி ஓர் எழுத்தாளன்!

வித்துவான் கு. சின்னையன்
(தமிழாசிரியர், K. H. S., தஞ்சை.)

ஆம்; பாரதி ஒப்பற்ற எழுத்தாளன், நாட்டு மக்கள் நல்வாழ்வு பெறவும், மக்களின் அடிமை வாழ்வும் மிடிமைத் தாழ்வும் அகலவும், கல்வியும் கைத்தொழிலும் வளரவும், வெள்ளை ஏகாதிபத்தியம் வெருண்டோடவும் பாரதி எழுத்தாளராகத் தோன்றினர். எழுத்தாளனுக்குத் தேவை பேனுவும் பேப்பரும் மட்டுமல்ல. அஞ்சா நெஞ்சமும் அறிவுத் திறனும் வேண்டும். உலகியலறிவோடு உயர்ந்த நோக்கமும் கலந்திருக்க வேண்டும். சாதி மதங்களைக் கடந்த சமத்துவ மனப்பான்மையோடு நீதிலாக் கலைகளைத் திருத்தமாகக் கற்றிருக்கவும் வேண்டும். உலக அரசியல் முறைகளை உணர்ந்திருத்தலோடு உயர்வானதெதுவென உணர்ந்திருக்கவும் வேண்டும். இத்தகைய குணங்கள் சுப்பிரமணிய பாரதியாரிடம் மெத்தவும் இருந்தன.

ஆளும் அரசனைவிட, அரசனுக்கு அறிவுரை கூறும் அமைச்சனைவிட, நாட்டைக் காக்கும் வீரனைவிட, எழுத்தாளன் சிறந்தவனுவான். ஆளும் அரசன் தன்னுட்சி அகலாமலிருப்பதற்காகவே அரும்பாடு படுவான். அமைச்சன் அரசன் விரும்பியதைச் செய்வதே சிறப்பெனக் கருதுவான். வீரன் வேந்தனுக்கு வெற்றியுண்டாக வேண்டியே வெம்போர் விளைவிப்பான். ஆனல்

நேர்மையான எழுத்தாளன் ஆற்றல் அரசர்க்கும்—அமைச்சர்க்கும் ; விரோதிக்கும்—வீரர்க்கும், கற்றூர்க்கும்—கல்லாதவர்க்கும், தன்னுட்டவர்க்கும்—பிற நாட்டவர்க்கும், உற்றுழி உதவும் நண்பன்போல் உதவுகின்றுன். இங்ஙனம் எல்லோர்க்கும் பயன்படும் ஆற்றலுடைய எழுத்தாளன் எழுதும் கருத்துக்கள் படிப்போர் உள்ளத்திலே பதிந்தும், கேட்போர் செவியிலே நுழைந்தும் உண்மையை உணர்த்துகின்றன. உணர்ச்சியை ஊட்டுகின்றன. ஊக்கத்தை மிகுவிக்கின்றன, ஆக்கத்தை ஆக்குகின்றன.

பாரதியின் எழுத்தாற்றல் துஞ்சிக்கிடந்த மக்களைத் துடித்தெழச் செய்தது. அஞ்சிக் கிடந்த மக்களை ஆண்மையுறச் செய்தது. வெள்ளையரோடு கொஞ்சிக் கிடந்த மக்களை எள்ளி நகையாடச் செய்தது. சாதிச் செருக்குடைய மக்களுக்குப் பேதிமருந்தாகி வேதனையளித்தது. வேற்றுமையை வீழ்த்தி ஒற்றுமை யுணர்ச்சியை ஊட்டியது. கதை கட்டுரை உருவிலே காட்சி யளித்தது. கவிதையாகவும் கற்பனையாகவும் அமைந்து நல்ல பல கருத்தை நாட்டிற்களித்தது. இன்னிசையோடியைந்த பண்ணுக அமைந்து இன்பமூட்டியது. சுதந்திர வேட்கையினைச் சுடர்விட்டெரியச் செய்தது.

வெள்ளையர் ஆட்சியின் வேதனைகளைக் கண்டு வேங்கையென யெழுந்தனர் வீரத் தமிழ்மக்கள். பட்டம் பதவிகளைத் துறந்தனர் பலர். செல்வத்தையும் சிறப்பையும் மறந்து சிறைச்சாலைக்குச் சென்றனர் பலர். அடியும் உதையும் பட்டு அவதிப்பட்டனர்பலர். அடக்குமுறைக்காளாகி ஆவி துறந்தனர் பலர்.

இவர்தம் எழுத்தாற்றலைக் கண்டு வெள்ளை ஏகாதிபத்தியம் வெருண்டோடியது. பாரதியின் பாக்களைத் தடுத்துப் பார்த்தது. கதைகளையும் கட்டுரைகளையும்

களையப் பார்த்தது. பாரதியாரையே படுதுன்பத்திற் காளாக்கிப் பாழுஞ் சிறையிலே தள்ளிச் சிதைக்கப் பார்த்தது. இறுதியில் சிந்தித்தவை முடியாமல் சிந்தை கலங்கி நின்றது. இங்ஙனம் அடிகுண்டர்களையும் வெடிகுண்டு களையும் வைத்துக்கொண்டு அடக்கியாண்ட வெள்ளை ஏகாதிபத்தியமே பாரதியின் எழுத்தாற்றலைக் கண்டு நடு நடுங்கியதென்றால் இவர்தம் ஆற்றல் நாட்டிற்கு விளை வித்த நன்மைகளை நவிலவும் முடியுமா?

''தேயிலைத் தோட்டத்திலே'' என்றெடுத்துத் தொழிலாளரின் துயரை விளக்கியும் ''கும்மியடி பெண்கள்'' என்றெடுத்து அடுப்பறையிலே அடைக்கப்பட்டுக் கிடந்த அரிவையர் கூட்டத்தினை ஆண்களோடு சமமாய் அமைத்தும்; ''ஓடி விளையாடு பாப்பா'' என்றெடுத்து பாலர்கள் திருந்தப் பகுத்தறிவூட்டியும், ''ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்'' என்றெடுத்து அறிவே ஆண்டவன் என்பதனை அறி வுறுத்தியும், மற்றும் கிளியொடு கிளந்தும் குயிலொடு கூவியும், நிலாவுடன் நிலவியும், பள்ளுடன் படிந்தும், கண்ணனுடன் காதலித்தும், விடுதலையோடு விளங்கியும் பாரதியின் எழுத்து வன்மை கவிதை வடிவிலே மக்கட் களித்திருக்கும் நன்மைகள் பலவாம்.

சிலர் கதைகள் மட்டும் எழுதுவர். சிலர் கட்டுரை கள் மட்டும் வரைவர். சிலர் கற்பனைகளை மட்டும் கூறு வர். சிலர் கவிதைகள் மட்டும் எழுதுவர். சிலர் மேடை யில் மட்டும் பேசுவர். சிலர் புதுமையிற் புகுவர். வேறு சிலர் பழமையில் மூழ்குவர். பாரதியாரிடம் இத்திறமை களனைத்தும் பொருந்தி யிருந்தன. சிறந்த எழுத்தாளர் களுக்குரிய ஆக்கும் வன்மையும் அழிக்கும் வன்மையும் இவரிடம் இயல்பாய் அமைந்திருந்தன. இவரால் தமி ழும் தமிழ்நாடும் தனிச் சிறப்பெய்தின.

இவர் தோன்றுதற்குமுன் கவிஞர்கள் பலர் இக்கன்னித்தமிழ் நாட்டிலே தோன்றினர். ஆனால் இவர்தம் கவிதைகள் கற்றோருள்ளத்திற்கே களிப்பையூட்டின. எதுகை மோனைகளை எண்ணியும், பொருள் விளங்காச் சொற்களைப் பொறுக்கியும், யமகந் திரிபினை யாப்புறத் தேடியும் அணியினை அமைக்க ஆர்வமுற்றும் கவிதைகள் இயற்றினர். காவியங்களை எழுதினர். ஆனால் பாரதியார் மட்டும் மக்களுக்காகக் கவிதைகள் எழுதினார். மக்கள்கவிஞராக விளங்கினார். சிறிது கற்றவரும் ''செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே'' என்ற இவருடைய பாட்டையிசைப்பர். ''சாதிகள் இல்லையடி பாப்பா – குலத் தாழ்ச்சி உயர்வு சொலல் பாவம்'' என்று பாலர்களும் பாடுவர். ''ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே'' என்று ஆனந்திப்பர். ''நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்துவிட்டால்'' என்று நெஞ்சம் நெக்குறுவர். ''அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே'' என்று ஆண்மையோடு கூறுவர்.

இங்ஙனம் எளிமையும் இனிமையும் இயைந்த கவிதைகளாலும் கதை கட்டுரைகளாலும் பாரதியாரின் எழுத்தாற்றல் நாட்டுக்கு விளைவித்த நலன்கள் பலவாம். இதனால்தான் ''பாட்டுக்கொரு புலவன் பாரதியடா'' என்று கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்கள் கூறியுள்ளார். பாரதியார் காலத்திற்கு முன் வேறு யாரும் எளிமையைக் கையாளவில்லை. இவர் நாட்டினுக்கு மட்டுமல்லாமல் பாட்டினுக்கும் வழி காட்டினார். இவர்தம் எழுத்து வன்மையை மக்கள் உணரட்டும். குடியுரிமை எய்திக் குவலயம் புகழ வாழட்டும். புத்துணர்வு பெற்றுப் புது வாழ்வில் திளைக்கட்டும்.

வாழ்க தமிழ்! வாழ்க தமிழகம்!!
வளர்க பாரதியின் புகழ்!!!



திரு. க. ந. நாட்டாரின் மணிவிழா அழைப்புக்காகக் கூடிய கூட்டம் கரந்தை (15—5—57)

எண்ணமறிதலும், எண்ணப்பாய்ச்சலும்.

நிரல்படத் தெளிவாக எண்ணங்களை எண்ணுந் திறத்தினர் அவைகளை அங்ஙனே சொல்லுதலிலும் வல்லுநராக விளங்குகின்றனர். அன்னவர் கேட்பவரின் செவி வழியாக அவர்தம் உள்ளத்துத் தங்கருத்தினைச் செலுத்துவர். அவ்வாறு அவர் செலுத்துங்கால் சொற்கள் அக்கருத்துக்களைத் தாக்கிச் சென்று உய்க்கின்றன. நோக்கத்தானும், உடற் செய்கையானும், தொடுதல் முதலிய கரணங்களானும் அவைகளைச் செலுத்தல் கண்கூடு. எண்ணங்கள் அருவப்பொருளாய் உள்ளன என்பர். அவ்வெண்ணங்கள் சொற்களாக மாற்றப்படும்போது உருவப்பொருளாக விளங்குகின்றன. ஆண்டு அச்சொற்கள் ஒலிப் பொருளாகவன்றோ உள்ளன அவை உருவப் பொருளாமாறு எங்ஙனம் அமையும் எனின் செவியால் அவை உணரப்படுதலின் அவை உருவப் பொருளே என்க. கட்புலப்படுவதனை மாத்திரம் உருவப் பொருள் என்று கொள்ளுதல் பொதுமக்கள் கொள்கை. ஐம்பொறியானும் உணரப்படும் பொருள்களையெல்லாம் காட்சிப்பொருள் என்றே ஏரண அறிஞர் கூறுதலின் ஒலியும் உருவப்பொருளே. கண்ணாற் காணப்படுவதேயன்றிச் செவி முதலியவற்றால் கேட்டலாதியவற்றையும் காட்சிப் பொருளெனல் அறிஞர்க் குடன்பாடே. வெல்லத்தினுடைய கட்புலத்துருவந் தெற்றெனக் காணுதான் நாவாற் சுவைத்தவழி அச்சுவை யுணர்வால் வெல்லமென அறிகின்றான். அங்ஙன் அவனறிந்தது காட்சியளவைதானே. செவி முதலியவற்றின் சான்றினையும் காட்சி எனத் தமிழிலும், சஹ + அட்சி = சாட்சி என வடமொழியிலும் வழங்குதல் இவ்வுண்மையை உணர்த்துதல் காண்க.

எண்ணத்தைச் சொற்களாக வெளிப்படுக்குங்கால் வாயால் வெளிப்படுத்துகின்றான். சிறப்புப்பற்றி நாவால் வெளிப்படுத்துவதாகவும் அறிஞர் கூறுவர். எனவே எண்ணங்கள் நாத்துணையால் உணர்த்தப்படுகின்றன. செவித்துணையால் உணரப்படுகின்றன. உருவப் பொருட்கருவியால் உணர்த்தவும், உணரவும், பெறு தலின் எண்ணங்கள் நுண்ணிய உருவப் பொருள்களே என்பது பெறப்படுகின்றது. எண்ணங்கள் அரும்புகள் போலவும், சொற்கள் மலர்கள் போலவும் உள்ளன. எண்ணங்கள் வெளிப்படுதற்கு நாவும், பயன்படுதற்குச் செவிகளும் இன்றியமையாதன. எனச் சொற்கூட்ட மாகிய மொழி இரு பொறிகளால் வளர்ச்சிச் சிறப்பினை யெய்துகின்றது.

எண்ணங்களைச் சொற்களாகிய தாங்கியால் செலுத்துவார் செலுத்த அவைகளை அறிவார் அறிகின் றனர். செலுத்துபவர் திறமையற்றாராயின் நன்கு செலுத்தப்படாமையின் அறிபவருள் பலரும் அறிய முடியாராகின்றனர். அதுபற்றியற்றே திருவள்ளுவரும் ''கற்ற செலச் சொல்ல''ல் வேண்டும் என்றனர். ''செல லுஞ் சொல் வல்லான்'' எனக் கம்பநாடரும் இக்கருத்தை வழி மொழிந்தனர். செலச் சொல்லல் வல்லர் அல்லா ரிடமிருந்து வெளிப்படுஞ் சொல்லையும் நுண்செவிப் புல முடையார் கேட்டு அவர்தம் எண்ணமறிந்து பயன் கோடலும் உண்டு.

செலச் சொல்லல் வல்லவர் கூறியவழி அறியாரும் உளர். செலச் சொல்லல் வல்லர் அல்லாதவர் கூறியவழி அறியும் மதுகையுடையவரும் உளர். எனினும் இவ்விரு துறையிலும் வல்லாரிடைப்பட்ட சொற்கள் தம் எண் ணங்களைத் தெளிவுற விரித்துணர்த்துதலால் அவர் தாமும், அச்சொற்களும் பயனும் பெருமையும் எய்துதல் வெளிப்படை.

இங்ஙனே நோக்கல் நோக்கமாகிய கருத்தினை நோக்கினால் வெளிப்படுத்துவாரும் அதனால் அறிவாரும் ஆகிய மதுகையர் பலர் உளர். எண்ணங்களைச் செலுத்துவார்க்கும், செலுத்தப் பெறுவார்க்கும் ஒற்றுமையியைபு (சமவாய சம்பந்தம்) பொருந்தியிருந்தால் சொற்றுணையின்றி நோக்கு முதலியவற்றாலும், எண்ணங்கள் பாய்கின்றன; பதிகின்றன. மிகவிஞ்சிய கேண்மை நிலையில் சொல், நோக்கம் முதலிய ஊர்திகள் இன்றி உணர்ச்சியே எண்ணங்களை ஒருவரிடையிருந்து ஒருவர்பால் உய்க்கின்றன; அறிதற்குக் கருவியாக வுள்ளன. இதற்குப் பிசிராந்தையாரும், கோப்பெருஞ்சோழனும் கேண்மையாகிய வரலாறு சான்றாக அமைந்திருக்கின்றது.

என் இளமைப் பருவத்தில் இயற்றமிழாசிரியர் நாவலர், ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களிடம் தனி மாணுக்கனாகப் பாடங் கேட்டுவந்தேன். அஞ்ஞான்று நாவலர் திருச்சிப் பிஷப்பு ஹீபர் கல்லூரியில் தமிழாசிரியராய் இருந்து அக்கல்லூரிக்குச் சிறப்புத் தந்து வந்தார். அவர்தம் இல்லம் மலைக்கோட்டைத் தெற்குத் தெருவில் தெற்கு நோக்கி இருந்தது. அதன் எதிரில் உள்ள சைவ சித்தாந்த சபைக் கட்டிடத்தில் நான் தனியேனாயிருந்து பாடம் பயில்வேன். அவர்கள் பாடங் கற்பிக்கும் இலக்கிய இலக்கணங்களில் ஐயமே தோன்றாது. அவை அப்படியே நன்கு பதிந்துவிடும். எஞ்சிய பொழுதெல்லாம் பல நூல்களையும், சான்றோர் செய்யுட்களையும் யானே தனித்துப் பயில்வேன். அவற்றுள் தோன்றும் ஐயங்கள்பற்றி நாட்டாரவர்கள் கல்லூரியிலிருந்து வந்ததும் அவர் வீட்டிற்குச் சென்று வினவுவேன். அவைகளை உடனே நீக்குவர். சில நேரங்களில் அவரிடம் ஐயம் வினவி அவர் விடை கூறத் தொடங்குமுன் தெளிவுகொண்டு ஐயம் நீங்குவேன். சில நேரங்களில் ஐயம் வினவச் சென்று அவர்முன் நிற்பேன். அவர்கள் "உலகதாசு, என்ன?" என்பார். "ஒன்றும்

இல்லை'' என்பேன். ''பின்னர் ஏன். நிற்கிறது?'' என்பார். ''ஐயம்'' என்பேன். 'சொல்லுக' என்பார். ''விளங்கிவிட்டது.'' என்பேன். ''பயித்தியம் இது. இந்தா, இங்கே வந்து பாரு'' என்று தன் அருமை மனைவியாரை விளித்துச் சிரித்துக்கொண்டே என்னை நோக்குவர். நானும் சிரித்துக்கொண்டே மீளுவேன். இப்படிப் பலகால் நிகழ்ந்தமை என் மனக்கண்முன் தெளிவுற நிற்கின்றது. இவ்வரலாறுகொண்டு நோக்கத்தால் எண்ணங்கள் பதிதலேயன்றி ஐயங்கள் நீங்கத் தெளிவுக் கருத்துக்கள் தோன்றுதல் உண்மையும் அவை பதிதலும் அறியப்படுகின்றன.

இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பு சேல மாவட்டத்து நாமக்கல் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியர் பணியை ஆற்றிவந்தேன். ஒரு நாள் இலக்கிய வகுப்பின் இடையே வேற்றுமைத் தொகாநிலைத் (வேற்றுமை விரி) தொடர்க்கு எடுத்துக்காட்டு வினவினேன். ஒருவரும் கூறிற்றிலர். அவரை நாணுவித்தற் கருத்தொடு இலக்குமிக்குட்டி என்னும் பெயரிய ஒரு மாணுக்கியை விளித்து விடைகூறப் பணித்தேன். நுண்ணுணர்வுடைய அம் மகள் செய்யுட்பாடப் புத்தகத்தைக் கையில் விரித்தபடி வைத்துக்கொண்டு நின்று பேழ்கணித்தாள். மாணுக்கர் என் தோல்வி கண்டு புன்னகை பூத்தனர். என் கருத்து நிறைவேருமைக்கு மாருகத் தோல்வியும் உற்றேனுதலின் யான் சிறிது உளம் உளைந்து ''என்ன! நன்கு கற்ற இவள், 'நான் புத்தகத்தைப் படிக்கின்றேன்' என்று சொல்லவும் அறியாளாய் வறிதே நிற்கின்றனளே'' என்று எண்ணினேன். எண்ணம் முடிவெய்தற்கு முன்பே 'நான் புத்தகத்தைப் படிக்கின்றேன்' என்ற சொற்ருெடரைச் சொன்னுள். இந்தச் சொற்ருெடர்க்கும் அப்பொழுது நடந்த இலக்கியப் பாடத்திற்கும் எந்த இயைபும் இல்லை. இந்நிகழ்ச்சி என்னை வியப்பின்கண் ஆழ்த்தியது. யான் கேட்டது கனவோ நனவோ என

எண்ணினேன். சிறிது நேரம் என் மனம் என்னிடம் இல்லை. வென்றி யிழந்து வியப்பில் அசைவற்று மெய்ம் மறந்திருந்த என்னை மாணுக்கர் கூர்ந்து நோக்கி உசா வினர்.

நான் உறுத்து நினைத்த அச்சொற்றொடரை அப் பொழுதே அப்படியே அம்மகள் கூறியது காரணமாக எண்ண அலைகளைப்பற்றி அரைமணி நேரம் அவர்தமக் கெடுத்தியம்பினேன். அக்கால மாணுக்கர் இக்கால இளைஞர் போல்பவரல்லர்; அவர்கள் கற்றற்பொருட்டே கல்விக்கூடம் புகுந்தவராதலின் உண்மை கண்டு பெரி தும் மகிழ்ந்தனர்.

என் தந்தையார் வீருக் கொடும்புராயர் பலகலை யறிஞர். களவு போன பொருள்களையும், பிற செய்தி களையும், எதிர்கால நிகழ்ச்சிகளையும் வினவியோரிடத்து அவைபற்றிய விடைகளைத் தெளிவுறத் தங்கைப்பட எழுதி அவரிடம் தந்தபின்னர் அவரைக் கூறப் பணித்துத் தம்மடலையும் படிக்கும்படி கூறுவர். மடலில் வரைந் துள்ளதும் வினவியோர் கூறியதும் ஒத்திருக்கக் கண்டு ஆண்டுள்ளார் அனைவரும் வியப்பெய்துவர். என் இள மைப் பருவத்துச் செருக்கால் இவ்வருங்கலைச் சிறப்பின் பெருமையை மதியாது புறக்கணித்த யான் இளமைப் பருவம் நீங்க அறிவு பெற்ற நிலையில் அவர் இறைவனடி யெய்தற்குச் சில திங்கள் முன்பு "இவ்வாறு சோதிடங் கூறுகின்றீர்களே; இத்திறம் நுங்கட்கு எவ்வகையால் எய்துவதாயிற்று" என்று என் தந்தையாரை வினவி னேன். "வினவியோர் வினவுக்கு விடை கூறவேண்டுமே என்று உறைக்க உன்னுவேன். அந்நிலையில் என் உளக் கண்முன் அவ்வெண்ணங்கள் எழுதிக் காட்டினாற்போலச் சொற்றொடர்களாய்க் காணப்படும். அவற்றை அப் படியே எழுதி அவர்கள்பால் கொடுப்பேன். இந்த ஆற் றலை யான் எவ்வகையில் பெற்றேன் என்பதனை அறி

யேன். பல மந்திரங்களைப் பலகாலம் உருப்போட்டுள்ளேன். அவற்றின் விளைவோ? என்னவோ? அறியேன். ஆனால் எனக்குத் தெரியாமல் இந்த ஆற்றல் என்பால் அமைந்திருக்கின்றது, வேறு ஒன்றும் இதுபற்றி அறியேன்'' என்று என் தந்தையார் விடை கூறினர்.

இன்னோரன்ன எடுத்துக்காட்டுகள் பல யான் நேரில் அறிந்தவை. அவற்றையெல்லாம் எடுத்தெழுதத் தொடங்கின் இக்கட்டுரை விரிதலின் இத்துடன் நிறுத்துகின்றேன்.

எனவே, எண்ணங்கள் சொல்லினாலும், நோக்கினாலும், உடற்செய்கையினாலும் ஒருவரிடமிருந்து மற்றவர்பாற் சேறலேயன்றி உணர்ச்சிபற்றியும் செல்கின்றன; அவற்றை அங்ஙனே அறிதலும் இயலும். இவ்வுண்மை பெறப்படுகின்றது.

வரிவடிவம் முதலிய வாயிலாகப் புலப்படுதலும், விலங்கு பறவை முதலியவற்றின் எண்ணங்களை யறிதலும், அவை யறிதலும் ஈண்டுக் கூறப்பட்டில.

வீ. உலகவூழியன்,
தமிழ் விரிவுரைஞர், சேலங்கல்லூரி.

(புலவர் ப. அரங்கசாமி, லால்குடி)

வாழியவே !

1. செல்வச் சிறப்பால் சீருற்றுச்
   சிந்தை நினைவால் உயருற்று
மல்கு வளத்தால் மாண்புற்று
   மதிநுண் ணறிவால் சிறப்புற்றுத்
தொல்குடி மரபால் சீருற்றுத்
   தொண்டின் சிறப்பால் புகழுற்ற
நல்ல முத்துப் பெருமகனர்
   நாளும் வாழி வாழியவே !

2. கல்வி கற்கும் மாணவர்கள்
   கவலை சிறிதும் இல்லாதே
பல்வித நன்மை பெற்றிடவே
   பரிந்து மகிழ்ந்து நலஞ்செய்து
செல்வப் பயனே ஈதலெனும்
   செஞ்சொற் பொருளின் செயல்காட்டும்
நல்ல முத்துத் திருமகனர்
   நாளும் வாழி நலமுடனே !

3. இன்பஞ் சான்ற இல்வாழ்க்கை
   இனிதே நடத்திப் புகழோங்கி
அன்பும் பண்பும் சிறந்தோங்கி
   அறுப தாண்டு நிறைவுற்ருேய் !
என்றும் நடுவூர்ப் பழமாகி
   இன்சுவை ஊருணி நீராகி
நன்றே வாழி பல்லாண்டு
   நல்ல முத்துத் தமிழ்மகனே !

★

எம்மூர்ச் சான்றோர்.

அன்பிற் சிறந்திட்ட சீலர்—அவர்
அருமைக் குணத்துநன் மேலோர்

ஆண்மை மிகுந்தநற் றாயோர்—என்றும்
ஆணவம் நீத்தசொல் வாயர்

இன்மொழி பேசியே மகிழ்வார்—எவர்க்கும்
இயன்றன செய்தபின் துயில்வார்

'ஈ'யென வந்தவர்க் களிப்பார்—அவர்
இன்முகம் கண்டுளம் களிப்பார்,

உண்மை உரைத்தலின் உயர்வை—நன்கு
உறுதியாய்க் கொண்டநற் பெரியார்

ஊக்கமாய் எதையுமேற் கொள்வார்—சிறுவர்
ஆக்கம் பெறவுரை விள்வார்.

எண்ணித் துணிந்திடும் நல்லார்—என்றும்
எடுத்த கருமம் முடித்திட வல்லார்

''ஏ''யென் றெவரையும் கூறார்—சற்றும்
ஈயாத புல்லரைச் சாரார்.

ஐயந் திரிபுகள் அகல—சிறுவர்க்
கயரா துழைத்திட்ட புகழோர்.

ஒன்று வுயர்ந்திட்ட தெய்வக்—கொள்கை
ஊன்றிய நற்றவக் கோமான்.

ஓரவஞ் சனையில்லா உரவோன்—உண்மை
உணர்ந்தறம் ஆற்றியே வருவோன்.

ஔவையின் பொன்மொழியாவும்—மனத்து
அமையவே கொண்டிட்ட அண்ணல்.

கண்ணிய மிகுந்தநற் செம்மல்—என்றும்
கருணையே காட்டிடும் வள்ளல்

'நாட்டார்' 'பணக்காரர்' என்றே—எந்தம்
நல்லூர் சொலும் செல்லப் பெயரோன்.

நல்லமுத் தென்னவே சிறந்தோன்—தமிழ்
நாட்டினுக்கே பணி புரிந்தோன்

ஆழிசூ ழுலகினில் நன்ருய்ப்—பல்
லாண்டுகள் வாழ்கவே ஒன்ருய்

அறுபதாம் அகவையின் விழவில்—எனது
அன்பு நிறைந்தஇவ் வாழ்த்தை

ஆறுமுகத்து எம்மிறைவன்—தனது
அருள்கொடு நானளிப் பேனே.

கள்ளப்பிரம்பூர்,
20—5—57.

முத்து. சரவணன்.

★

வாழ்த்து

நன்னெறியும் ஆள்வினையும் நண்பருள்சேர் தொண்டுடனே
துன்னுநரைப் பேணுமொரு தூய்மையெலாம்—மன்னுபெரும்
நற்புகழ்சேர் நல்லமுத்து நாட்டார் எனும்பெயர்கொள்
பொற்புடையோய் வாழி பொழிந்து!

அன்பன்

ச. பாலசுந்தரம்,

விரிவுரையாளர், க, த, சங்கம்,

உ

திருவாளர் K. N. நாட்டார் அவர்களின்

அறுபதாம் ஆண்டின் நிறைவிழா

வாழ்த்து.

நிலந்தரு திருவில் நீள்வளங் கொழிக்கும்
தஞ்சை நாட்டின் தலைமைப் பேரூர்
பலவுண் டாயினும் பண்புகள் மிகுதலால்
பெரியோர் வாழும் பெரிய பிரம்பூர்
அவ்வூர் வாழ்ந்த அரும்பெருங் குணத்தோன்
அறமே ஆண்மை அளவிலாச் சிறப்பொடு
பெருமை பலவும் பெற்ற ஏந்தலாம்
கந்து நாட்டார் கவினுறச் செய்த
புண்ணிய மெல்லாம் புகழுருக் கொண்டு
வந்ததோவெனச் சிந்தை எண்ணுறத்
தோன்றிய தலைவ தூயநற் பெரும!
தந்தை யிலார்க்குத் தாயும் நீயே
தாயிழந் தோர்க்குத் தந்தையு நீயே
உலகில் வாழும் உயர்பெருஞ் செல்வர்
உயர்ந்தோ ருடனே உலவித் திரிவர்
ஏழை எளியோர் என்றெண் ணுது
உயர்ந்தோர் தாழ்ந்தோர் எனவுன் னுது
யாவரும் நண்பர் யாவரும் சுற்றம்
எனவே வாழ்ந்து எம்போல் வார்க்கும்
நலமே நாடி உழைத்திடும் அண்ணல்!

உம்மால் சிறந்து உயர்நிலை பெற்றோர்
அம்மா எம்மால் அறையவும் படுமோ
பகையே செய்யினும் பகைமனங் கொளாது
இகமே வாழ ஏற்ற வகையெலாம்
நாடி உழைக்கும் நல்ல முத்துவே
மக்களுக் குதவும் மாண்புறு மனத்தொடு
அரசியல் துறையில் அவ்வப் பொழுதெலாம்
அங்கம் வகித்து ஆவன புரிவோய்!
பூவுல கந்தனில் புண்ணிய மிகுந்து
வாழ்வோர் தாமே வயங்கு அறுபதாம்
ஆண்டின் நிறைமணம் அமைவுறப் பெறுவர்
புண்ணிய மிகுத்தே புவியினில் வாழ்க!
செம்மை மனத்தின் சிவநெறி வழாது
அம்மை அப்பன் அருளுக் கிலக்காய்
வாழும் பெரியோய்! வாழும் பெரியோய்!
இன்றுபோல் என்றும் எழில்நலஞ் சிறந்து
நாட்டவர் போற்ற நட்பினர் வாழ்த்த
உலகம் புகழ ஊரவர் மகிழ
வாழ்க வாழ்க வாழியர் நெடிதே.

இங்ஙனம்,

புலவர், **K. பிச்சையாச் சோழகர்,**

17—7—57.

தமிழ் வாழ்க :

திரு. நல்லமுத்து நாட்டார், திருமதி. தையலம்மை அவர்களின்

அறுபதாம்-ஆண்டுத் திருமணத்தின்போது அளித்த

வாழ்த்து மலர்.

வாழ்க! வாழ்க! வளமார் நந்தம்
ஆழ்கடல் ஆழும் அருந்தமிழ் நாட்டில்
வாழ்க! வாழ்க! வளர்பிறை எனவே;
ஆளுடைப் பிள்ளை ஆண்டு விழாவில்

தன்னூர் வந்த என்னைக் கண்டே
அணித்தே யுள்ள ஐயா றதனில்
நற்றமிழ் கற்றல் நலமே என்றெனை
அருந்தமிழ் வளர்த்திடும் பெரும்புகழ்
கல்லூரி சேர்த்தீர்; கற்றுத் தேர்ந்ததும்

என்னை யழைத்தே இன்றமிழ்ப் பணியை
ஈந்தீர்; நலம்பல இதுபோல் இயற்றல்
எல்லா முத்துக்கும் இயலா வாகலின்
நல்ல முத்தென நவின்றதும் பொருந்தும்;
அன்றும் இன்றும் அமைதி யுடனே

செயலொடு சொல்லும் சேரப் பெற்று
காட்சிக் கெளிமை கடுஞ்சொல் லின்மை
மாட்சி யளிக்கும் மனநலம் உடையீர்!
ஒருநாள் செல்லினும் பன்னாள் செல்லினும்
தலைநாள் போன்ற விருப்புடன் இருந்தே

க. நல்லமுத்து நாட்டார் — தையலம்மை

எவரோ "மாணவர்" என்று வந்திடின்
இன்முகங் காட்டி அன்புரை அளித்து
விருந்தை யூட்டி வேட்கை வினவி
வேண்டுவோர் வேண்டுவ விரைவில் முடித்து
வாழும் வாழ்வே வையகத் துள்ள
அருந்தவம் எனக்கொண் டாற்றும் தொண்டரே
நாட்டார் என்ற நற்பொதுப் பெயர்தான்
சிறப்புப் பெயராய்க் குறிப்பிடப் படுவோர்
இருவர்; அவருள் ஒருவர் தமிழால்
நாட்டோர் உளத்தே நலமுடன் திகழ்பவர்;
மற்றொரு வராக மதித்திடு நீர்தாம்
உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
நாட்டோர் உளத்தே நலமுடன் திகழ்வீர்;
கற்பும் பொற்பும் காணத் தகுந்த
அருளுடைச் செயலும் அடக்கமும் பெற்ற
தையல் அம்மை தம்முடன் இன்றே
அறுபதாம் ஆண்டுத் திருமணங் கொண்டீர்;
கண்டு யாமே கொண்டனம் உவகை;
இன்றென நீவிர் என்றும் மகிழ்வுடன்
எல்லா வளமும் இயையப் பெற்று
நல்லறஞ் செய்து நாட்டிற் குழைத்து
வெண்ணாற்று மணவினும் பன்னாள்
வாழ்க! வாழ்க! வழிவழி சிறந்தே

இங்ஙனம்,

கழக உயர்நிலைப்பள்ளி
வல்லம்

தே. பீ. பாலதண்டாயுதபாணி,
தலைமைத் தமிழாசிரியர்.

திரு. க. நல்லமுத்து நாட்டார் அவர்களின்

60-ஆம் ஆண்டு நிறைவு விழா

வாழ்த்துப்பா.

(வித்துவான் சி. அரசப்பனுர்)

1, அன்புமிகு நல்லறிஞர் மிகப்புகழும்
சோணுட்டின் அகத்தே வானின்
இன்பொழுகு பிரம்பூரின் இதயமாம்
நாட்டாரின் குலத்தே வந்த,
நன்முத்தாய்ப் புகழ்வளர்க்கும் நல்லமுத்தாய்
நாட்டாண்மைக் கழகத்தே நடுஇருந்து
என்போன்ற வளங்குறைந்த பல்லோரின்
இதயத்தே இருப்போய் வாழி!

2. வரும்நண்பர் அயலார்கள் நலங்குறைந்த
இளஞ்சிறுவர் யாவ ரையும்
இரும்,என்றே கையமர்த்தி எழில்முகத்தால்
விருந்தூட்டி இன்பங் காட்டிப்
பெருந்தன்மை எனுங்குணத்தின் ஓருருவாய்ப்
பிறர்வாழத் தாம்வாழும் பெரியோய்நும்
அரும்பொருளும் நற்பண்பும் அதைக்காக்கும்
அருஞ்செயலும் அரிதே ஆகும்!

3. அறுபதாம் நிறையாண்டில் அறம்பலவே
நன்கியற்றி அருமை யான
நிறைகுணத்தோர் புலமைநிறை அறிஞர்
அன்பர் நும்செயலே போற்ற

நிறைவாழ்வு தாம்வாழ்ந்து பிறர்வாழ்வில்
ஒளியேற்றி நித்த நித்தம்
குறைநிறைக்கும் அறியாமைப் பசிநோயைத்
தீர்க்கின்ற வள்ளல் வாழி!

4. வாழ்க்கையெனும் நெறிநின்று சுடர்காட்டி
வளம்பிறரின் வறுமை போக்க
வாழ்க்கைதனைப் புகழ்க்குன்ருய் நிலைநிறுத்தி
வான்மதிபோல் தண்மைஒளி வீசிநின்று
வாழ்வெல்லாம் உதவுதொழில்தனையேசெய்து
வாழ்கவென வாழ்கின்ற வாழ்வோய்நும்
வாழ்வுதனை "மலைவிளக்கு" என்பேன்கையை
"வண்மாரி" என்பேன்பின் என்னசொல்ல?

5. இன்றேபோல் மனமகிழ்ந்து இதயம்பொங்கி
எழில்வாழ்வே தாம்வாழ்ந்து புலவர் பல்லோர்
நன்ருன புகழ்ச்சொல்லால் வாழ்த்தி வாழ்த்தி
நாடுபுகழ் பெருஞ்செயலே செய்தார் இன்று
மன்றுள்ளோன் கருணையினுல் நீண்ட வாழ் நாள்
மக்களுக்காய் நீர்பெற்று" மகிதலத்தோர்
"என்நண்பர் எனக்கூற வாழ்க" என்றே
என்னிதயம் தான்மலர வாழ்த்தி னேனே.

தமிழ்த்தாய் வாழ்க !

கோவை,
3—7—57.

வாழ்க நாட்டார் ! வளர்க அவர்தம் தொண்டு !!

வாழ்க வள்ளால் வாழ்க !

வந்தாரை வரவேற்றீர்! வாழ்வதற்கு வகை செய்தீர்! இன்முகமும் சொல் நலமும் எக்காலமும் ஏற்றீர். ஐந் தாண்டுகளா—? பத்தாண்டுகளா—? அறுபது ஆண்டுகள். அரும்பெரும் பணிகள் ஆற்றினீர். இன்றோ தங்களுக்கு அறுபதாம் ஆண்டு நிறைவு விழா. அருகே அன்னையார் தையல்நாயகி அம்மையார். வாழ்க வள்ளால்! வாழ்க நீவிர் !!

திரு நாட்டார்தம் இருநாட்டார் !

ஆம். "பண்டு முளைத்த செந்தமிழைப் படிக்க வந்தேன்" என்றார்க்கு நன்று எனத் தமிழமுதை நின் றூட்டும் நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்.

திக்கற்றவன் யான் எனத் தீந் தமிழைக் கற்க வந்தார்க்குப் புக்கிடமும், நல்லுணவும் பெற வழிகாட்டி யவர் பிரம்பூர் நல்லமுத்து நாட்டார் அவர்கள். ஆம் தாங்கள் தான் அந்தக் கிடைத்தற்கரிய நல் முத்து.

கள்ளர் குலக் கோமகனே !

சமுதாயப் பள்ளமதில் வீழ்ந்திருந்த கள்ளர் பெருஞ் சமூகத்தை நல்ல நெறிக்குக் கொணர நாளும் உழைத் தவர் தாங்கள்; நாவாரப் பாராட்டுகின்றோம் நாங்கள்.

சங்கம் வளர்த்தீர் ! தமிழ் வளர்த்தீர் !!

செந்தமிழை வளர்க்கும் சீர் கரந்தைத் தமிழ்ச் சங்கம் எங்கும் புகழ்மேவ ஏற்றீர் பெரும் பொறுப்பை. மாணவர்கள் எங்கிருந்து வந்தாலும் ஏற்று ஆதவு தந்தீர்; ஏற்றம் மிகக் கொண்டீர். ஆட்சி மன்றம் சென்றீர்; அரும்பணிகள் கண்டீர் !

மாவட்ட மன்றத்திலே மக்த்தான பொறுப்பு ஏற்றீர்! செந்தமிழைக் காணுத ஐயாற்று அரசர் கல்லூரியில் 'எங்கள் அன்னை தமிழ்; அவட்கு இடுங்கள் அரியாசனம்' என்றீர். அன்னை மகிழ்ந்தாள். அரியாசனம் அமர்ந்தாள்.

அறுபதல்ல ; ஆருயிரம் !

அறுபதாம் ஆண்டு நிறைவு விழா மட்டுல்ல; ஆருயிரம் ஆண்டு நிறைவு விழாவும் தங்கட்குக் கொண்டாடத் தமிழர், சிறப்பாகக் கள்ளர் குல மக்களாகிய நாங்கள் காத்திருக்கிறோம். எங்கள் விருப்பம் நிறைவேறச் செந்தமிழ் அன்னை திருவருள் புரிவாளாக. வாழ்க நாட்டார்! வாழ்க அவர்தம் துணைவியார் !!

அபுள்ள,

த. சிவசங்கரன்,

தமிழாசிரியன்,

த. அ. இராமலிங்கஞ்செட்டியார்

உயர்நிலைப்பள்ளி,

ஆர். எஸ். புரம் போஸ்டு,

கோவை,

உயர்திரு நல்லமுத்துநாட்டார் திருமதி தையல்நாயகி அம்மை அறுபதாம் ஆண்டு நிறைவு வாழ்த்து

கதலிக் காவிரி காவிரி நாடன்
இந்திர குலத்தோன் இமிழ் திரை எழுந்த
சந்திரன் அன்ன தண்ணளி யாளன்
கள்ளப்பிரம்பூர் நல்லமுத்து
நாட்டார் அவர்கள் இளங்காட்டில் மலர்ந்த
தையல்நாயகியுடன் வையகமதனில்
மறையோன் துணையென இறையோன் உமையென
வள்ளுவப்பெருந்தகை வாசுகித்தாயென
இல்லற வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாய்
அறுபதாண்டிற் பல கதிரவன் மதியென
வாழ்க பல்லாண்டு வாழ்க பல்லாண்டு
வான்புகழ் ஓங்க வாழ்க பல்லாண்டு.

கந்தசாமி,
டெபுடி ஜெயிலர்,
3—7—1957. சென்ட்ரல் ஜெயில், மதுரை.

உயர்திரு. க. நல்லமுத்து நாட்டார் அவர்களின்

அறுபதாம் ஆண்டு நிறைவு விழாப் பாராட்டுரை.

திருநெறியும் தமிழ் மொழியும் செழித்துயரப்
பல தொண்டும் சிறக்கச் செய்யும்
அருமைமிகு சான்றோருள் அருமைமிகு
பெருஞ்சான்றோய்! அரிய நல்ல
பெருமை பல அமைந்தொளிரப் பிறங்குகிற்போய்
நல்லமுத் தெனும் பெயர்கொள் தோன்றால்
மருவியநின் மணிவிழா மாட்சிமைகண்
டுளம் மகிழ்கோம் மகிழ்ந்து வாழ்க.

இங்ஙனம்,
S. நாராயணசாமி
உபதலை, நீலகிரி.
3—7—57.

திரு. க. நல்லமுத்து நாட்டார் அவர்களின்

60-ஆம் ஆண்டுவிழாக்காட்சி வருணனை.

தூக்கத்திற்கும் விழிப்பிற்கும் இடையே புரண்டு கொண்டிருந்தேன். டிங்டாங் என்று சுவர்க்கடிகார ஒலி கேட்டது. மணி நான்கு ஒலிபெருக்கிச் சத்தம் செவியைத் துளைத்தது. தஞ்சாவூரா பிரம்பூரா என்ற ஐயத்தில் இருந்தேன். மேள வாத்திய ஒலி கேட்டது. சரி பிரம்பூர்தான். வந்த காரியத்தைக்கூட மறந்து விட்டோமே என்று நினைத்துக்கொண்டு எழுந்தேன். சுறு சுறுப்பாக எனது வேலைகளை எல்லாம் முடித்துக்கொண்டு நாட்டார் அவர்கள் வீட்டிற்குச் சென்றேன். என்னை முதலில் குலை வாழை கட்டப்பட்டிருந்த பெரிய பந்தல் வரவேற்றது. ஆண்களும் பெண்களும் அங்குமிங்கும் பரபரப்பாக நடந்துகொண்டிருந்தார்கள். பந்தலைக் கடந்து சென்றேன். புதிய முத்து நிலையம் பழைய வீட்டுடன் ஒட்டிக்கொண்டு என்னை வரவேற்றது. 60-ஆம் திருமணம் கூட அப்படித்தானே; பழைய மணமும் புதிய மணமும் ஒன்றுகக் காட்சியளிப்பது? உள்ளே சென்றேன். கொல்லைப்புறத்தில் மிகப் பெரிய பந்தல். பந்தல் நிறையப் பார்ப்பனர்; காய்கறிக் குவியல்; பாத்திரக்கடை; பல பெண்கள்; இது என்ன கண்காட்சியா என்று யோசித்தேன். பிறகு யூகித்தேன்; முப்பது சமையல்காரர்கள்; உதவிக்குப் பல பெண்கள் என்று புரிந்துகொண்டேன். மணமக்களைத் தேடினேன். புதிய கட்டிடத்தை ஒட்டிக்கொண்டுள்ள பழைய கட்டிட நடுவில் பழைய நாட்டார் அவர்களும் தையல்நாயகி அம்மையாரும் புதிய தோற்றத்தில் இருந்தார்கள். உடலைப் புதிய பட்டுடைகள் மறைக்க, உடைகளை மாலைகள் மறைக்க, இவர்களை ஆண்களும் பெண்களும் மறைக்க ஐயர்களுக்கு முன்னுலே இருவரும் உட்கார்ந்திருந்தனர். இருவரும் கைலாயத்திலிருந்து இப்போதுதான் மண்ணுலகத்துக்கு வந்த சிவசக்திகள்போல் இருந்தனர். கூடியிருந்தவர்களோ இப்போதுதான் மண்ணுலகத்தை

விட்டுக் கைலாயம் வந்ததுபோல் தோன்றினூர்கள். இந்த நிலைமை ஆறு மணி நேரம் இருந்தது.

மணமக்கள் சடங்குகள் முடிந்ததும் மக்களை விழித்துப் பார்த்தார்கள். பலர் போட்ட மாலைகளை ஏற்றுக் கொண்டார்கள். காணிக்கைகளைப் பெற்றுக்கொண்டார்கள். ஆசிர்வதித்துத் திருநீறு கொடுத்தார்கள். எழுந்து அந்தக் காட்சியுடன் திருவுலா வருவதுபோல் தெருப்பக்கம்சென்று தம்பி வீடு மைத்துனர் வீடுகளுக்குள் நுழைந்து மீண்டனர். உடனே முத்து நிலைய முகப்பில் நாட்டாரை வைத்துப் பலர் பாராட்டிப் பேசினூர்கள். பாராட்டின் முடிவில் இவர்கள் கண்ணருவி கசிய விடை தந்தார்கள்.

காலை 5-மணிமுதல் 10-மணி வரை காலை உணவு நிகழ்ந்துகொண்டிருந்தது. 10–30க்குப் பகல் உணவுக்கு இலை போட்டாகிவிட்டது. அமைதியாகப் பகல் 2-மணிவரை உணவுண்ணல் நடந்தது. மாலை 4-மணிக்குச் சிற்றுணவு தொடங்கி இரவு உணவுவரை நிகழ்ந்தது.

மணத்திற்காக எத்தனை கார்கள் வந்தன? எத்தனை M. L. A. க்கள் வந்தார்கள்? எத்தனை செல்வர்கள் செல்வாக்குள்ளவர்கள் வந்தார்கள் என்று நான் மகாநாடா நடத்துகிறேன் கூற? பெரிய கூட்டம், அவ்வளவு தான் நான் கண்டது. நாட்டார், அவர்களுக்கெல்லாம் உரிய முறையில் வரவேற்பளித்தார்கள். அழைப்பிற் கிணங்கி வந்தவர்களுக்கெல்லாம் வராதவர்கள் வெட்கப்படும்படி (கேள்விப்பட்டால்) நடந்துகொண்டார்கள்.

மறுநாள் காலையில், நான் தஞ்சைக்குப் புறப்படும் பொருட்டு அவர்களிடம் சொல்லிக்கொள்ளச் சென்றேன். நாட்டார் அவர்கள் கடிதங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நான் என்ன என்று கேட்டேன். அவர்கள் இதோ பார் தந்திகள், வாழ்த்துக் கடிதங்கள் என்று என்னிடம்

கடிதக் கும்பலைத்தள்ளினார்கள். பிறகு இதற்கெல்லாம் நன்றிக் கடிதம் அச்சுப்போட்டு அனுப்பவேண்டாமா என்றார்? நான் உடனே வந்தவர்கள், வாழ்த்து அனுப்பிய வர்கள் யாவருக்கும் பொதுவில் பத்திரிகைக்கு விளம்பரம் கொடுங்களே என்றேன். ஆம் நல்ல யோசனைதான் என்று கூறிச் சுதேசமித்திரன், தமிழ் நாடு இரண்டிற்கும் நன்றி விளம்பரம் தந்தார்கள். நான் அந்தக் கடிதங்களை எடுத்துக்கொண்டுவந்து படித்துப்பார்த்தேன். தந்திகள் பல இருந்தன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை என்ன இருக்கும்? உங்களுக்கே தெரியுமே. வாழ்த்துக் கடிதங்களில் பல கருத்துக்கள் இருந்தன. இராச ராச சமையச் சங்க வாழ்த்துக் கடிதம் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. ஒவ்வொன்றாகக்கூற விருப்பமில்லை. பெயர்களைமட்டும் குறிப்பிடுகின்றேன்.

R, E. குணமாலை.

தந்தி கொடுத்தவர்கள்.

1. திரு. சிவானந்தச் சாளுவர் அவர்கள், எடமேலையூர்.
2. திரு. மோகனசுந்தரம் அவர்கள், குடந்தை.
3. திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள், அண்ணாமலை நகர்.
4. திரு. கோவிந்தசாமி அவர்கள், பெருங்களூர்.
5. திரு. கோபாலன் அவர்கள், தேவக்கோட்டை.
6. திரு. தர்மராசப் பிள்ளை அவர்கள், புதுக்கோட்டை.
7. திரு. கோவிந்தராசன் அவர்கள், வேதாரண்யம்.
8. திரு. கிருஷ்ண ராவ் அவர்கள், திருவையாறு.
9. திரு. கனகராசன் அவர்கள், வெள்ளைக்கோயில்.
10. திரு. முத்துக்கருப்பன் ,, தேவக்கோட்டை.

வாழ்த்துக்கடிதம் அனுப்பியவர்கள்.

1. டாக்டர் N. இராமநாதன் அவர்கள், M. B. B. S.,
தஞ்சை.
2. திரு. அ. வேதரத்னம் அவர்கள், M. L. A.,
வேதாரண்யம்.
3. திரு. பாலகிருட்டிணன் M. A. L. T. அவர்கள்,
தஞ்சை.
4. திரு. ஒளவை. துரைசாமி அவர்கள், மதுரை.
5. திரு. டாக்டர் மா. இராசமாணிக்கம் அவர்கள்,
மதுரை.
6. திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் B. O. L.,
சென்னை.
7. திரு. சாமி. சிதம்பரனார் அவர்கள், சென்னை.
8. திரு. கு. அருணசலக் கவுண்டர் அவர்கள், நெல்லை.
9. திரு. அருணசலம் பிள்ளை அவர்கள், அண்ணமலைநகர்.
10. திரு. உ. பழநி அவர்கள், M. A. அண்ணமலை நகர்.
11. திரு. சி. மணவாளன் அவர்கள் B. E., மதுரை.
12. திரு. நா. சுந்தரராசன் அவர்கள், கோவை.
13. திரு. தனுக்கோடி அவர்கள், நாகை.
14. திரு. V. அரங்கசாமி அவர்கள், லால்குடி.
15. திரு. அ. அப்பாவுத்தேவர் அவர்கள், உக்கடை.
16. திரு. அ. விசுவநாதத்தேவர் ,, ,,
17. திரு. கி. துளசியையா வாண்டையார் அவர்கள் பூண்டி
18. திரு. நாச்சியப்பச்செட்டியார் அவர்கள், பள்ளத்தூர்.
19. திரு. தி. கி. சுப்பிரமணியம் அவர்கள், பசுமலை.
20. திரு. சா. வீ. நடராசன் அவர்கள், பேரளம்.
21. திரு. தியாகராயக் காடவராயர் அவர்கள்,
அய்யம்பேட்டை.
22. திரு. சுவாமிநாத மேற்கொண்டார் அவர்கள் M.LA.,
கூனம்பட்டி.
23. திரு. துரைராசப்பிள்ளை அவர்கள், திருச்சி.

24. திரு. தே. வேங்கடராமன் அவர்கள், சென்னை.
25. திரு. D. குமாரசாமி அவர்கள், திருக்காட்டுப்பள்ளி.
26. திரு. R. கிருஷ்ணசாமி அவர்கள், குடவாயில்.
27. திரு. கோ. துரைராசன் அவர்கள், சென்னை.
28. திரு. ச. அண்ணாமலை அவர்கள், M.B. B.S., வேதாரண்யம்.
29. திரு. ஆறுமுகசாமி அவர்கள், ஆவரம்பட்டி.
30. திரு. து. நடேசன் அவர்கள், கூத்தாநல்லூர்.
31. திரு. சிவ. சண்முகசுந்தரம் அவர்கள், கரந்தை.
32. திரு. K. பிச்சையாச்சோழகர் அவர்கள், குத்தாலம்.
33. திரு. வேல் சம்பந்தம் அவர்கள், தஞ்சை.
34. திரு. தக்ஷிணாமூர்த்தி அவர்கள், தஞ்சை.

நன்கொடையாளர்.

1.	உயர்திரு.	S. நடராஜமாணிக்க நாட்டார் அவர்கள் ...	ரூ. அ, ப. 51—0—0
2.	,,	T. A. நாராயணசாமி பிள்ளை அவர்கள்	51—0—0
3.	,,	R. ஏகாம்பரநாதன் அவர்கள்.	30—0—0
4.	,,	C. வேதாசலம் அவர்க்ள் ...	25—0—0
5.	,,	S. சுயம்பிரகாசம் ,, ...	25—0—0
6.	,,	N. L. வரதராசலு நாயுடு, அவர்கள் ...	25—0—0
7.*	,,	அண்ணாமலைத்தென்கொண்டார் அவர்கள் ...	25—0—0
8.	,,	கு. சின்னையன் அவர்கள்	20—0—0
9.	,,	S. முத்துக்குமரன் ;, ...	15—0—0
10.	,,	N. சுந்தரராசன் ,, ...	15—0—0
11.*	,,	தெ. பி. பாலதெண்டாயுதபாணி அவர்கள் ...	10—0—0
12.	,,	இரா. அருணசலம் அவர்கள்.	10—0—0
13.	,,	I. K. சிவஞானம் ,, ...,	10—0—0

14.	உயர்திரு.	கோபால்சாமி ஐயர் ,, ...	10—0—0
15.	,,	D. சிவசங்கரன் ,, ...	10—0—0
16.	,,	S. முத்துகிருட்டின நாட்டார் அவர்கள்	10—0—0
17.	,,	P. தியாகராசக் காடவராயர் அவர்கள்	10—0—0
18.	,,	கோ. வேங்கடாசலம் அவர்கள்	10—0—0
19.	,,	ந. அரங்கராசு பாப்புரெட்டியார் அவர்கள்	10—0—0
20.*	,,	S. இராமையா மழவராயர் அவர்கள்	10—0—0
21.*	,,	வி. அ. அரங்கசாமி அவர்கள்	10—0—0
22.*	,,	ந. சிவாநந்தம் ,, ...	10—0—0
23.*	,,	ப. சங்கிலிமுத்து ,, ...	10—0—0
24.	,,	கி. கோதண்டபாணி ,, ...	10—0—0
25.	,,	அ. கைலைகுரு ,, ...	5—0—0
26.	,,	ந. மு. கோவிந்தராச நாட்டார் அவர்கள்	5—0—0
27.	,,	பே. திருஞானசம்பந்தம் அவர்கள்	5—0—0
28.	,,	S. திருநாவுக்கரசு அவர்கள்	5—0—0
29.	,,	ந. துரைராசன் அவர்கள்	5—0—0
30.	,,	தெ. பட்சிராஜன் ,, ...	5—0—0
31.	,,	சிங்காரவேல் அவர்கள், இளங்காடு ...	5—0—0
32.	,,	M. இராமச்சந்திரன் அவர்கள்	3—0—0
33.	,,	வே. வேங்கடராமன் அவர்கள்	2—0—0
34.	,,	K. துரைசாமி அவர்கள் ...	2—0—0
35.	,,	S. சுந்தரராசு ,, ...	2—0—0

36.	உயர்திரு.	M. தங்கையன் ,, ...	2—0—0
37.	,,	அப்பாவு (நேமம்) ,, ...	2—0—0
38.	,,	T. M. இராசகோபால் நாயுடு அவர்கள்	2—0—0
39.	,,	S. நாராயணசாமி அவர்கள் ...	2—0—0
40.*	,,	பொ. குழந்தையா ,, ...	2—0—0
41.	,,	S. ஞானமிர்தம் ,, ...	1—0—0
42.	,,	சி. அரசப்பன் ,, ...	1—0—0
43.	,,	ஆ. சச்சிதானந்தம் ,,	1—0—0
44.	,,	S. இராசாமணி ,, ...	1—0—0
45.	,,	R. பழனிவேலு ,, ...	1—0—0
46.	,,	D. குமரசாமி ,, ...	1—0—0
47.	,,	N. ரெங்கபாஷ்யம் ,, ...	1—0—0
48.	,,	C. அரங்கராசலு ,, ...	1—0—0
49.	,,	G. அருளாநந்தம் ,, ...	1—0—0
50.	,,	V. கோவிந்தசாமி ,, ...	1—0—0
51.	,,	P. சங்கரமூர்த்தி ,, ...	1—0—0
52.	,,	சத்தியபாமா , ...	0—8—0
53.	,,	S. மரியானந்தம் ,, ...	0—8—0
54.	,,	M. சண்முகம் பிள்ளை ,, ...	0—8—0
55.	,,	V. இராசமாணிக்கம் ,, ...	0—8—0
56.	,,	S. திலகவதி ,, ...	1—0—0
57.	,,	வே. கிருட்டினசாமி ,, ...	1—0—0
58.	,,	வை. குப்புசாமி ,, ...	1—0—0
59.	,,	S. V. நடராசன் ,, ...	1—0—0
60.	,,	சிவ. குப்புசாமி ,, ...	1—0—0
61.	,,	கு. சிவமணி ,, ...	1—0—0
62.	,,	க. பரமசிவம் ,, ...	1—0—0
63.	,,	க. இரத்தினவேலு அவர்கள், சாத்தனூர் ...	1—0—0
64.	,,	K. பாலசுப்பிரமணியம் ,, ...	1—0—0

65.	உயர்திரு.	D. இராமையாச்சோழகர் ...	1—0—0
66.	,,	மூக்கையா பாண்டுரேயர் ,, ...	1—0—0
67.	,,	திருநாவுக்கரசு ,, ...	1—0—0
		ஆகக் கூடுதல் ரூ.	501—8—0

சேலவு விபரம் பின்னர் வெளியிடப்படும்.

எங்கள் வேண்டுகோட்கிணங்கிக் கட்டுரைகள், வாழ்த்துக்கள் எழுதியனுப்பியவர்கட்கும், பொருளுதவி புரிந்தவர்கட்கும், இடங்கொடுத்துதவிய கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்க்கும் நன்றி.

இங்ஙனம்,

மணிவிழாக் குழுவினர்.

மணிவிழாக் குழுவினர்.

திரு. சுயம்பிரகாசம் அவர்கள் B.A. B.L., தலைவர், க. த. சங்கம்

,, சி. வேதாசலம் பிள்ளை அவர்கள் B. A. B. L., அமைச்சர், க. த. சங்கம்.

,, என். எல். வரதராசலுநாயுடு அவர்கள் பொருளாளர், க.த. சங்கம்.

,, தெ. துரைராசப் பிள்ளை அவர்கள், திருச்சித் தமிழ்ச் சங்க அமைச்சர், மயிலஞ் சந்தை, திருச்சி.

,, மு. கோவிந்தராய நாட்டார் அவர்கள், B. A. L. T. நா. பேரவை.

,, கு. சின்னையன் அவர்கள், தஞ்சை மா. த. க. செயலாளர்.

,, தி, பாலசுப்பிரமணியம் அவர்கள், தமிழாசிரியர், த. மா. த. க. பொருளாளர்.

,, டாக்டர், அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் M. A. PH. D. சென்னை மாநிலத் தமிழாசிரியர் கழகத் தலைவர்.

,, கோ. இரத்தினம் பிள்ளை அவர்கள், திருச்சி மாவட்டத் தமிழாசிரியர் கழகச் செயலாளர்.

,, தி. கி. சுந்தரமூர்த்தி அவர்கள், மதுரை மாவட்டத் தமிழாசிரியர் கழகச் செயலாளர்.

திரு. என். சுந்தரராசன் அவர்கள், கோவை மாவட்டத் தமிழாசிரியர் கழகம்.

,, வீ. உலகவூழியர் அவர்கள், நகராட்சிக் கல்லூரித் தமிழாசிரியர், சேலம்.

,, கு. அருணசலக் கவுண்டர் அவர்கள், இந்துக் கல்லூரித் தமிழாசிரியர், திருநெல்வேலி.

,, T.K. கோதண்டபாணி அவர்கள், புஷ்பம் கல்லூரி, பூண்டி.

,, குஞ்சிதபாதம் அவர்கள், உரத்தூர், தென் ஆர்க்காடு மாவட்டம்,

,, அன்பு கணபதி அவர்கள், பச்சையப்பன் கல்லூரி, சென்னை. சென்னை மா. த. கழகத் துணைத்தலைவர்.

,, T. A. நாராயணசாமிப்பிள்ளை அவர்கள், தஞ்சை.

,, அ. கைலைகுரு அவர்கள், தஞ்சை.

,, அ. வடிவேற் சோழகர் அவர்கள், K. H. S. தஞ்சை.

,, S. நடராஜ மாணிக்க நாட்டார் அவர்கள், தஞ்சை.

,, A.Y.S. பரிசுத்த நாடார் அவர்கள், நகராட்சித்தலைவர், தஞ்சை.

,, பக்கிரிசாமி வாண்டையார் அவர்கள், தஞ்சை.

,, வீ. அ. சுந்தரம் பிள்ளை அவர்கள், கரந்தை, தஞ்சை.

,, ஐ. கு. சிவஞானம் பிள்ளை அவர்கள், கரந்தை, தஞ்சை.

,, நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள், பள்ளியக்ரகாரம், தஞ்சை.

,, S. P. பெரியசாமிப்பிள்ளை அவர்கள், திருவையாறு, தஞ்சை.

,, சிவப்பிரகாச சேதிராயர் அவர்கள், அரசர்கல்லூரி, திருவையாறு, தஞ்சை.

,, வி. அ. அரங்கசாமி அவர்கள், அரசர்கல்லூரி திருவையாறு தஞ்சை

,, இராமையா மழவராயர் அவர்கள், பள்ளியூர்.

,, அண்ணமலைத் தென்கொண்டார் அவர்கள், மேலக்கோவில்பத்து

,, சிவ. வடிவேல் உடையார் அவர்கள், திருவாரூர்.

,, இரா. ஏகாம்பரநாதன் அவர்கள், துணைத்தலைவர் சென்னைமாநிலத் தமிழாசிரியர் கழகம்.

,, கைலாசத்தேவர் அவர்கள், அவனியநல்லூர்.

,, வெங்கடகிருஷ்ண பிள்ளை அவர்கள், தஞ்சை.

,, இராமச்சந்திர பத்தர் அவர்கள், B. A. தஞ்சை.

,, நல்லப்பெருமாள் நாட்டரையர் அவர்கள், திருக்காட்டுப்பள்ளி.

,, S. முத்துக்கிருட்டின நாட்டார் அவர்கள், அய்யம்பேட்டை.

திரு, சிவானந்தச் சோழகர் அவர்கள், கூறைநாடு.
,, பிச்சையாச் சோழகர் அவர்கள், குற்றாலம்.
,, அரசப்பன் அவர்கள், சாத்தனூர்.
,, S. முத்துக்குமரன் அவர்கள், பிரம்பூர்.
,, M. பாலசுப்பிரமணிய நாட்டார் அவர்கள், பிரம்பூர்.
,, அ. பொன்னண்ணுக்களத்தில்வென்றார் அவர்கள், திருச்சி.
,, மு. சிங்கப்பெருமாள் நாட்டார் அவர்கள், தஞ்சை.
,, கணபதிச்சேதிராயர் அவர்கள், இளங்காடு.
,, குப்பு பாப்புரெட்டியார் அவர்கள், இளங்காடு.
,, தர்மராஜப் பிள்ளை அவர்கள், புதுக்கோட்டை.
,, V. K. அருணசலம் பிள்ளை அவர்கள், கரந்தை.
,, ஐயாப் பிள்ளை அவர்கள், கரந்தை.
,, பாலகிருஷ்ண அய்யர் அவர்கள், திருவாரூர்.
,, சிவானந்தச்சாளுவர் அவர்கள், இடங்காங்கோட்டை,
,. தியாகராயக் காடவராயர் அவர்கள், பசுபதிகோவில்.
,, மயிலை சிவமுத்து அவர்கள், சென்னை.
,, சுப்பையா நாட்டார் அவர்கள், களிமேடு.
,, பழனிச்சாமி உடையார் அவர்கள், பிள்ளையார்நத்தம்.
,, நடராசத் தென்கொண்டார் அவர்கள் கூனமங்கலம்.
,, என். இராமநாதன் அவர்கள், கரந்தை.
,, சோமுச்சக்கரப்ப நாட்டார் அவர்கள், மதுக்கூர்.
,, து, நடேசன் அவர்கள், கூத்தாநல்லூர்.
,, ப. சங்கிலிமுத்து அவர்கள், ஏனங்குடி.

செயலினர்.

தலைவர், A. Y. S. பரிசுத்த நாடார் அவர்கள் M. L. A.
துணைத்தலைவர், C. வேதாசலம் பிள்ளை அவர்கள் B. A. B. L.,
பொருளாளர், S. நடராசமாணிக்க நாட்டார் அவர்கள்.
செயலாளர், இரா, ஏகாம்பரநாதன், 1500, தெற்கலங்கம், தஞ்சாவூர்.
,, ச. முத்துக்குமரன் அவர்கள், தஞ்சை.

கூட்டுறவுப் பதிப்பகம் தஞ்சாவூர்.